Registered as a news paper. இலவசப் பிரதி பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
ரா ம் கோ
(சி-553)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மாசி 07 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்ஹிஜ்ஜா 16 (19.02.2003) புதன்கிழமை இதழ் :140

# மாகாண புனர்வாழ்வு திட்டத்தில் பணியாற்ற இரு இந்திய அதிகாரிகள் திருமலை வருகை

## தகவலை வெளியிடவேண்டாமென தங்கியுள்ள விடுதி முகாமையாளருக்கு பணிப்பு

(நமது நிருபர்)

வட- கிழக்கு மாகாண புனர்வாழ்வு அமைச்சில் இணைந்து பணியாற்றுவதற்காக, இந்திய நிர்வாக சேவை அதிகாரிகள் இருவர் திருகோணமலைக்கு விஜயம் செய்துள்ளனர்.

வட - கிழக்கு மாகாணத்தில் மாகாண புனர்வாழ்வு அமைச்சு ஊடாக மேற்கொள்ளப்படவிருக்கும் புனர்வாழ்வுச் செயற்திட்டங்களில் இவர்கள் இணைந்து பணியாற்றவுள்ளனர் என்று அறியவருகிறது.

நேற்றுமுன்தினம் திருகோணமலை வந்தடைந்த இவர்கள், ஆறு மாதங்கள்வரை அங்கு தங்கியிருந்து பணியாற்றவுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை வட - கிழக்கு மாகாண சபை அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.


சென்னையைச் சேர்ந்த பி.நாகராஜா என்பவரும், ஆந்திராவைச் சேர்ந்த மேலும் ஓர் அதிகாரியுமே இவ்வாறு தமது சேவையைத் திருமலையில் தொடங்கவுள்ளனர்.

எனினும், எவ்வாறான பணிகள் இவர்களுக்கு வழங்கப்படவிருக்கின்றது என்பது குறித்து நேற்று மாலை வரை திட்டவட்டமான தகவல்கள் வெளியிடப்படவில்லை.

விடுதி ஒன்றில் தங்கியிருக்கும் இவர்கள், தாம் தங்கியிருப்பது குறித்து எவருக்கும் தகவல் வெளியிட வேண்டாம் என்று விடுதி முகாமையாளருக்கு பணித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ரோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டில் வட - கிழக்கு அபிவிருத்தித்திட்ட வரைபு!

விண்ணாணம் விநாசியர்



எல்லாம் கோணமலையானுக் குத்தான் வெளிச்சம்...!

## கிளிநொச்சியில் நேற்று முக்கிய சந்திப்பு

(கிளிநொச்சி)


**ஜப்பானின் தலைநகர் ரோக்கியோவில் நடைபெறவிருக்கும், உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் வட-கிழக்கு அபிவிருத்தி தொடர்பான அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதன் முதற்கட்டமாக, இவ்வறிக்கை தயாரிப்பதற்கான தயார்படுத்தல்களை மேற்கொள்வதற்காக கிளிநொச்சியில் நேற்று முக்கிய கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.**

வட- கிழக்கில் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்திட்டங்கள் தொடர்பான தேவைகள் குறித்து மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு, அதன் அடிப்படையில் திட்டங்கள் முன்வைக்கப்படவுள்ளன. இத்திட்டங்கள் அடங்கிய அறிக்கையே ரோக்கியோ மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதற்கு வசதியாக, எதிர்வரும் மார்ச் மாத இறுதிக்குள் மேற்படி திட்டங்கள் அனைத்தையும் தயாரித்துக்கொள்வதற்கும், இத்திட்டங்களை உள்ளடக்கிய முழுமையான அறிக்கையைத் தயாரிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேற்படி முயற்சியில் விடுதலைப் புலிகள் மற்றும் அரசுப் பிரதிநிதிகளுடன் இணைந்து, உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐக்கிய நாடுகள் நிறுவனம் ஆகிய மூன்று

(10 ஆம் பக்கம் பார்க்க)





நேற்றைய சந்திப்பில் கலந்துகொண்ட புலிகள் தரப்பினரையும் சிறான் பணிப்பாளரையும் முதற்படத்திலும், வருகை தந்தை குழுவினரை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# உலக, ஆசிய வங்கிகளின் பிரதிநிதிகள் கிளிநொச்சியில் புலிகள் தரப்புடன் பேச்சு

(கிளிநொச்சி)

உலகவங்கிப் பிரதிநிதி, ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதி, ஐ.நா. அபிவிருத்தித் திட்ட அலுவலகப் பிரதிநிதி ஆகியோர், நேற்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரைச் சந்தித்தனர்.

இச்சந்திப்பின்போது, வடக்கு - கிழக்கு மீள்குடியேற்றம், அபிவிருத்திப் பணிகளுக்கான பங்களிப்பையும் செயற்பாடுகளையும் விரைவுபடுத்துவதற்கான ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. இச்சந்திப்பு அரசியற்துறை நடுவப் பணியகத்தில் காலை 10 மணி முதல் இரண்டு மணிநேரமாக நடைபெற்றது.

முன்னதாக ஹெலிகொப்டரில் கிளிநொச்சிக்கு வருகைதந்த குழுவில் - உலகவங்கியின் பிரதிநிதி பீட்டர் ஹரோல்ட், ஆசிய அபிவிருத்தி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## திலக் மாரப்பனவுக்கு எதிரான

# நம்பிக்கையில்லா பிரேரணை நாடாளுமன்றத்தில் தோல்வி!

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வி அடைந்திருக்கின்றது.

இந்தப் பிரேரணை நேற்று விவாதிக்கப்பட்ட பின்னர் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. பிரேரணைக்கு எதிராக 126 வாக்குகளும், ஆதரவாக 84 வாக்குகளும் கிடைத்தன.

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பியும் ஆதரவாக வாக்களித்தன.

நேற்று நாடாளுமன்றத்தில் வாக்களிப்பதற்காக, முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த, சிறைச்சாலை அதிகாரிகளின்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலனாய்வுப் பிரிவுக்கு வெளிநாட்டு உதவி

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடாத்தப்பட்டுவரும் வேளையிலும் - சமாதானமோ, யுத்தமோ இரண்டிற்கும் நாம் தயாராகவே இருக்கின்றோம் எனப் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்தார்.

அவர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்று, நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசும்போது -

அரசாங்கத்தின் புலனாய்வுச் சேவைகள் மிகவும் விழிப்புடனேயே

(10 ஆம் பக்கம் பார்க்க)

# கறுப்புப்பட்டி போராட்டம்; ஆதரவு தருமாறு கோரிக்கை

## வெகுஜன அமைப்புகள் ஒன்றியம் விடுத்தது

தமிழ் மக்களின் சமாதானத்திற்கான விருப்பத்தையும், சிறிலங்காவின் பாதுகாப்பு படையினரின் அடாவடித்தனங்களையும் சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்தும் நோக்குடன் இன்று நடைபெறும் கறுப்புப்பட்டி போராட்டத்திற்கு தமிழ் மக்கள் தமது முழுமையான ஆதரவை வழங்குவதுடன் உணர்வுபூர்வமாக இப்போராட்டத்தில் பங்குபெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு இன்று நடைபெறவுள்ள கறுப்புப்பட்டி போராட்டம் தொடர்பாக வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021-2223916, 0777-517019, 01-505632, 074-612656, 01-390128.
(சி-518)

# தேசிய அரசு அமைக்க முயற்சி முற்றிலும் தவறான தகவலாம்

## மறுக்கிறார் அநுரா பண்டாரநாயக்க

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியுடன் பொதுஜன ஐக்கிய முன்னணி தேசிய அரசு ஒன்றை அமைப்பதற்கு முயற்சி எடுத்துவருவதான செய்திகள் முற்றிலும் தவறானவை. ஒருபோதும் இத்தகைய தேசிய அரசு அமைக்கப்படமாட்டாது என்று அநுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவித்ததாவது, ஐ.தே.கவுடன் தேசிய அரசு அமைக்க முயற்சிகள் எடுக்கப்படவில்லை ஆயினும், ஐ.தே.கட்சியுடன் நெருங்கிய உறவை அமைப்பதற்கு பொ.ஐ.முவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஜே.வி.பியுடன் சுதந்திரக் கட்சி கூட்டணி அமைப்பது தொடர்பான ஒப்பந்தம் மார்ச் மாதத்தில் கைச்சாத்திடப்படவுள்ளது. ஜே.வி.பியுடன் இணைந்து அடுத்த மாதம் 10 ஆம் திகதி, மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றைக் கொழும்பில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. இப்பேரணியில் 5 லட்சம் மக்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அநுரா பண்டாரநாயக்க மேலும் தெரிவித்தார்.

# புலிகளுடன் அரசு உறுதியான ஒப்பந்தத்தினை ஏற்படுத்த வேண்டும்

## முதலீட்டுச் சபைத் தலைவர் கருத்து

அரசாங்கம், விடுதலைப் புலிகளுடன் உறுதியான ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட வேண்டும் எனவும், அதற்காகவே மக்கள் காத்துக் கொண்டிருப்பதாகவும் இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் அர்ஜுன மகேந்திரன் தெரிவித்தார். இவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

யுத்தம் தணிந்துள்ள போதிலும் இலங்கையில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலீடுகளைச செய்வதற்கு ஆர்வமின்றியே உள்ளனர். இதனால் அரசாங்கம் புலிகளுடன் உறுதியான ஒப்பந்தம் ஒன்றைச் செய்ய முன்வரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# தேசிய அடையாள அட்டை கிளிநொச்சியில் வழங்க ஏற்பாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தேசிய அடையாள அட்டைகளைத் துரிதமாக வழங்குவதற்கு ஆட்பதிவுத் திணைகளம் விசேட நடமாடும் சேவையை ஆரம்பித்துள்ளது.

மேற்படி திணைக்களத்தின் அதிகாரிகள் குழு ஒன்று இவ்விசேட சேவைக்காக கிளிநொச்சிக்குச் சென்றுள்ளது.

வன்னிப் பகுதியில் அதிகளவான மக்கள் தேசிய அடையாள அட்டைகள் இல்லாமல் உள்ளனர். இவர்களுக்கு அடையாள அட்டைகளை விரைவாகப் பெற்றுக்கொடுப்பதற்காகவே மேற்படி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (க)

# ரிச்சர்ட் பத்திரன ஐ.தே.கவில் தென்மாகாணசபை வேட்பாளர்!

(கொழும்பு)

தென்மாகாண சபைக்கான தேர்தலில் ஐ.தே.க.வின் முதலமைச்சர் பதவிக்கான வேட்பாளராகத் தான் நிற்கப் போவதாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் கல்வி அமைச்சருமான ரிச்சர்ட் பத்திரன அறிவித்துள்ளார்.

காலியில் பொதுநிர்வாக அமைச்சர் வஜிர அபேவர்த்தனவின் வீட்டில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய போதே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது, ஜே.வி.பியுடன் சேர்ந்து ஐ.தே.கவின் ஆட்சியைக் கவிழ்க்க பொ.ஐ.மு. முயற்சிகளைச் செய்கின்றது. ஆனால், இது நடக்கப் போவதில்லை. வெறும் கனவாகவே இருக்கும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, சில நாட்களுக்கு முன்னரே ரிச்சர்ட் பத்திரன பத்திரிகை ஒன்றுக்கு - இறந்த தனது தகப்பன் வந்து கேட்டாலும் ஐ.தே.கவில் சேரமாட்டேன் எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# முன்பள்ளி நிலையங்களை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

யாழ்.குடாநாட்டிலுள்ள முன்பள்ளி நிலையங்கள் அபிவிருத்தி செய்யப்படவிருக்கின்றன. இதற்கான நடவடிக்கைகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மேற்கொண்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் அண்மையில் திறக்கப்பட்ட முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டுப் பிரிவினால் இந்த வேலைத் திட்டங்கள் நடைபெறவுள்ளன.

இதற்காக முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டுப்பிரிவு, முன்பள்ளி நிலையங்களில் மேற்கொள்ளவேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஆராய்ந்து வருகின்றது.

குடாநாட்டில் இயங்கிவரும் முன்பள்ளி நிலையங்கள், மாணவர்கள், ஆசிரியர்களுடைய நிலைமைகள், ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் மற்றும் கற்பித்தலுக்குத் தேவையான உபகரணங்கள், தளபாட வசதிகள், ஆசிரியர்களுடைய தகைமைகள் போன்ற பல்வேறு நிலைமைகள் தொடர்பாக முன்பள்ளி கல்வி மேம்பாட்டுப் பிரிவு ஆராய்ந்து வருவதுடன்,

கல்வி கற்கும் மாணவர்களுடைய போசாக்கு நிலைமைகள், போசாக்கு வழங்க வேண்டியதன் அவசியங்கள் குறித்தும் ஆராய்ந்து வருகின்றது. (ச)

# கைக்குண்டு தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, போரதீவு பிரதேச சபைத்தலைவர் துரைரத்தினத்தின் இல்லத்தின் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இவர் ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் அணியைச் சேர்ந்தவர். நேற்றுமுன் தினம் இரவு மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள், இரவு 11 மணியளவில் கைக்குண்டை வீசி விட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப் படுகிறது.

# ரத்வத்தவுக்கு தெய்வ ஆசிவேண்டி கண்டி விகாரையில் விசேட பூசைகள்

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் ஜெனரல் அனுருத்த ரத்வத்தவிற்கு தெய்வ ஆசி வேண்டி கண்டி நாக தேவல விகாரையில் விசேட பூசை வழிபாடுகள் நடத்தப் பட்டன.

பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த மகிந்த ராஜபக்ஷ, சரத் அமுனுகம, றெஜி ரணதுங்க போன்றோரும் இந்த விசேட பூசைகளில் பங்குபற்றினர். இப்பூசை வழிபாடுகளில் இரண்டாயிரத்துக்கும் அதிகமானோர் கலந்துகொண்டனர்.

ஜெனரல் ரத்வத்த - முன்னர் கண்டி தலதா மாளிகையின் தியவதன நிலமேயாகவும், நாக தேவல விகாரையில் பசநாயக்க நிலமேயாகவும் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழ். வைத்தியசாலையில் மாணவர்கள் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிரமதானப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

பல்கலைக்கழக மருத்துவபீட 1 ஆம் வருட மாணவர்கள், இச்சிரமதானப் பணிகளை மேற்கொண்டிருந்தனர். யாழ்.போதனா வைத்தியசாலையின் சில இடங்களில் புற்கள் பற்றைகளாக வளர்ந்து, வடிகால்கள் சீரற்றுக் காணப்பட்டன. வைத்தியசாலையின் ஒருபகுதியே இவ்வாறு துப்புரவு செய்யப்பட்டுள்ளது.


நிறஞ்சனாஸ் சங்கானை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

பிரசாந்த், சிம்ரன் நடித்த

ஜோடி

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 காட்சி

THE MUMMY RETURNS

(சி-544)



ராஜா யாழ்ப்பாணம்.

5 ஆவது வாரமாக

விஜய், ஸ்நேகா, மணிவண்ணன், வடிவேல் நடித்த

வசீகரா



10.30, 2.30, 6.30

17 முதல் 19 வரை

இரவு 9.30 மட்டும்

THE MUMMY RETURNS

(சி-545)


# இன்றைய நாள் இனிய நாள்

**19-02-2003 - புதன்கிழமை**

| | |
|---|---|
| மேடம் | :- சௌபாக்கியம், காரியசித்தி, தொழில் விருத்தி, தனதானிய நிறைவு. |
| இடபம் | :- உறவினரால் கவலை, தனித்த நிலை, பிரயாண கஷ்டம், வீண்பழி. |
| மிதுனம் | :- நற்குணம், தனவரவு, இல்லச்சிறப்பு, களஸ்திர சுகம், நற்கீர்த்தி. |
| கர்க்கடகம் | :- சிநேகிதரால், கவலை, கோபமிகுதி, புதிய ஸ்தானம், வயிற்றில் ரோகம். |
| சிங்கம் | :- நெருப்பினால் ஆபத்து, சரீர ஆரோக்கியம், பிரயாச மிகுதி, பணக்குறைவு. |
| கன்னி | :- களஸ்திர சுகம், அதிகார சித்தி, தொழில் சிறப்பு, வாக்குவாதம். |

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

| | |
|---|---|
| துலாம் | :- தேகமெலிவு, நிலை பிரிவு, இனசன கவலை, மனப்பயம். |
| விருச்சிகம் | :- நன்மதிப்பு, குடும்பனுகூலம், புதிய ஸ்தானம், குடும்ப மகிழ்ச்சி. |
| தனு | :- வாக்குக் கலகம், காரிய விக்கினம், சௌபாக்கியம், அதிக செலவு. |
| மகரம் | :- இனசன கொண்டாட்டம், குடும்ப மகிழ்ச்சி, தாரபுத்திர மகிழ்ச்சி. |
| கும்பம் | :- கோபமிகுதி, பிரயாணக் கஷ்டம், ஏமாற்றம், பெரியோர் மதிப்பு. |
| மீனம் | :- வாகனலாபம், நன்மதிப்பு, நற்குணம், அதிகார சித்தி. |


இலங்கையில் முதன்முறையாக...

நறுமணம் குடியிருக்கும் இடத்தில் ஸ்ரீலஷ்மி கடாட்சம் பூரணமாகக்கிடைக்கும் தேவி குடிகொண்டிருக்கும் துர்கணங்கள் கிடையா

- நன்றி சுகிசிவம், இந்தியா.

உங்கள் இல்லத்தில் அஷ்டலஷ்மி குடிகொண்டு, செல்வம் அளித்திட வாங்குவீர், தெய்வீக நறுமணம் தரும்....

நியூ ஜெனரேசன் வாசனை

பூஜா ஆயில்




New Generation™ perfumed Puja Oil™

Spreads Divine Fragrance on lighting the lamp, Best Companion for Meditation & Yoga

நல்லெண்ணெய், ஒன்பது சமித்துக்கள் மற்றும் வாசனைத்திரவியங்கள் சேர்ந்தது.

- எரியும் விளக்கில் சிறிதளவு பூஜா ஆயில் ஊற்றி தீபம் ஏற்ற தோஷங்கள் நிவர்த்தியாகும். செல்வம் பெருகும்.
- ராகுகால பூஜை, ஹோமம், நவக்கிரகம் சாந்தம் அடைவதற்கு ஏற்ற பூஜை எண்ணெய்.
- மன அமைதிக்கான, தியானம் செய்வதற்கு ஏற்றது.

மொத்த வியாபாரிகளுக்கு விசேட சலுகை தரப்படும். குறைந்த கையிருப்பே உள்ளபடியால் முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்.

இல்லத்தில் பூஜைகளுக்கு உகந்தது.

Sole Agent in Srilanka

**Bawani Trading,** Colombo - 6.

T.P: 365024, 072-429691 E.mail: vbawani@sierra.lk

இலங்கை முழுவதும் விநியோகஸ்தர்கள் தேவை

(சி-601)

தெய்வீக நறுமணம் நாள்தோறும்! செல்வம் எப்போதும்!!



# லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி

யாழ்ப்பாணம்

## புதிய அனுமதி - 2003

தகைமை : க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் சித்தி.
ஆயுர்வேதப் பரம்பரையினராயின் க.பொ.த. (சாதாரணதர) பரீட்சையில் சித்தி.

வயதெல்லை : 30 வயது

விண்ணப்ப முடிவு திகதி : 10.03.2003

விண்ணப்பப்படிவத்தினையும் விபரங்களையும் அலுவலக நேரத்தில் ரூ. 20 செலுத்திப் பெற்றுக்கொள்ளவும்.

தபால்மூலம் பெறவிரும்புவோர், ரூ. 20 இற்கான காசுக்கட்டளையைப் பின்வரும் முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

பதிவாளர்,
லங்கா சித்த ஆயுர்வேத,
மருத்துவக் கல்லூரி.

127, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (251)

# வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு

# அரசாங்கம் புதிய வழிமுறையை ஆரம்பிக்கும்!

வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பதற்காக அரசாங்கம் 'தருண அருண' திட்டத்தை தீவிரமாக நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளது.

இதற்காக உள்நாட்டு, வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை இனங்காணும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இப்பணிகள் எதிர்வரும் மே முதலாம் திகதி முடிவடையவிருக்கின்றன.

இத்திட்டத்தின் கீழ் பட்டதாரிகளுக்கு மூவாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதுடன், தகவல் தொழில்நுட்பமும், ஆங்கிலமும் ஒரு வருடத்திற்குக் கற்பிக்கப்படவுள்ளது.

தற்போது நாட்டில் 20 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகள் உள்ளனர். இவர்களில் முதற்கட்டமாக 10 ஆயிரம் பேரையும், இரண்டாவது கட்டமாக மிகுதி 10 ஆயிரம் பேரையும் சேர்த்துக்கொள்ள முடிவு செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

இத்திட்டத்தை மனிதவலு, கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சு, மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சு, விளையாட்டுத்துறை அமைச்சு, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் என்பன இணைந்து முன்னெடுக்கவுள்ளன.


## வவுனியா கல்விக் கல்லூரி மாணவர்கள் பகிஷ்கரிப்பு

(வவுனியா)

வவுனியா தேசியக் கல்வியியல் கல்லூரியில் பகிடிவதையில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, இடைநிறுத்தப்பட்ட நான்கு மாணவர்களையும் மீண்டும் கல்லூரிக்கு அழைக்குமாறு கோரி - நேற்று முன்தினம் வவுனியா வளாகத்தில் பகிஷ்கரிப்பு போராட்டம் ஒன்று நடைபெற்றது.

இடைநிறுத்தப்பட்ட நான்கு மாணவர்களை ஒன்றரை மாதமாகியும் நிர்வாகம் மீண்டும் கல்லூரிக்கு உள்வாங்கவில்லை என மாணவர்கள் குற்றஞ்சாட்டினர். (87)

## இலங்கைக்கு வருமாறு புஷ்ஷிற்கு அரசு அழைப்பு



((வொஷிங்ரன்)

சமாதான முயற்சிகளுக்கு அமெரிக்கா தெரிவித்துவரும் ஆதரவைக் கருத்திற்கொண்டு, இலங்கை அரசாங்கம் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் வில்லியம் புஷ்ஷை இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியுடன், அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவலையும் இலங்கைக்கு வருமாறு அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுத்துள்ளதாக அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்தார்.

## இடம்பெயர்ந்த மக்களின் காணி உரிமம்; சட்டப் பிரச்சினைகளை விளக்கப் புதிய நூல்!

### விரைவில் வெளியிட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்தகால இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த மக்களின் காணி உரிமம் தொடர்பாகவும், அவர்கள் எதிர்நோக்கும் ஏனைய சட்டப்பிரச்சினைகள் தொடர்பாகவும் விளக்கும் புதிய சட்டநூல் ஒன்று தயாரிக்கப்படவுள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் தமது சொந்த இடங்களுக்குச் செல்லும்போது சட்டப் பிரச்சினைகள் பலவற்றைச் சந்திக்க வேண்டியுள்ளது.

இம்மக்களின் அசையும், அசையாச் சொத்துக்களின் உரிமம் தொடர்பாகப் பல சட்டச் சிக்கல்கள் உருவாகியுள்ளன. அத்துடன், சொத்துக்களின் உரிமம் தொடர்பான ஆவணங்களையும் அவர்கள் இழந்துவிட்டனர்.

இவ்வாறான விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்து தீர்வு காண்பதற்காக - அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் நிறுவனமும், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் இணைந்து நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

இதன் முதற்கட்டமாகக் கடந்த வாரம் கொழும்பில் விசேட கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. இக்கருத்தரங்கில் கொழும்பு உயர்நீதிமன்றச் சட்டத்தரணிகள் பலரும், யாழ்ப்பாணத்தில் இருந்து மாவட்ட நீதிவான் த.விக்கினராஜா உட்பட பல சட்ட வல்லுநர்களும், பொது அமைபபுக்களின் பிரதிநிகளும் கலந்துகொண்டனர்.

இவ்வாறான சட்டப்பிரச்சினைகளை சாத்தியமான வகையில் எவ்வாறு அணுகலாம் என்பது குறித்தும், நீதிமன்றங்கள் மூலம் இப்படியான வழக்குகளுக்கு எவ்வாறு தீர்வு காணமுடியும் என்பது பற்றியும் பொது மக்களுக்குத் தெளிவு ஏற்படும் வகையில் மேற்படி சட்ட நூலில விரிவாக விளக்கப்படவுள்ளது.

### மொழிபெயர்ப்பாளர் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

(மானிப்பாய்)

அரசாங்க மொழிபெயர்ப்பாளர்கள சேவையில் வகுப்பு 1 இன் அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் அரசாங்க நிர்வாக, முகாமைத்துவ, மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் டிட்டா விமலசிறியினால் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை எதிர்வரும் மார்ச் மாதம் 21 ஆம் திகதிக்கு முனனர்- பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத்திணைக்களம், பெலவத்தை, :பத்தரமுல்ல எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (100)

## வன்னியில் தொழிற்பயிற்சி; சிறான் கூட்டத்தில் ஆராய்வு!

(கிளிநொச்சி)

வடக்கு - கிழக்கில் உள்ள மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளுக்கான செயலகத்தின் கூட்டம், நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் கிளிநொச்சியில் உள்ள சிறான் பணிமனையில் நடைபெற்றது. மாலை 5.30 மணி வரை இக்கூட்டம் நடைபெற்றுள்ளது.

சிறான் செயலகப் பணிப்பாளர் செல்வின இரேனியஸ் தலைமையில் நடைபெற்ற இந்தக்கூட்டத்தில்- தொழிற்கல்வி பயிற்சியுடன் தொடர்புபட்ட, கொழும்பைத் தலைமையகமாகக் கொண்ட பிரதிநிதிகளும், பணிப்பாளர்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது, உடனடியாக வன்னியில் தொழில்நுட்பப் பயிற்சிகளை ஆரம்பிக்க வேண்டும் என்பது தொடர்பாகவும், வன்னியில் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் எவ்வகையான பயிற்சிகளுடன் தொடர்புடைய முன்னோடிப்பயிற்சிகளை உடனடியாக ஆரம்பிக்கலாம் என்பது பற்றியும், பெண்களுக்கான பயிற்சிகள் பற்றியும் கூட்டத்தில் ஆராயப்பட்டது.



யாழ்.போதனா வைத்தியசாலையில் மருத்துவபீட மாணவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிரமதானப் பணிகளில் ஈடுபட்டிருந்ததைக் காண்கிறீர்கள்.

### கிணற்றில் வீழ்ந்து யுவதி மரணம்

(யாழ்ப்பாணம்)

கிணற்றில் தவறுதலாக விழுந்த யுவதி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

கந்தரோடை - சுன்னாகத்தைச் சேர்ந்த குமாரவேற்பிள்ளை கமலவதனி (வயது 23) எனும் யுவதியே வீட்டின் பின்புறத்தில் உள்ள கிணற்றுக்குள் தவறி விழுந்துள்ளார். மேற்படி யுவதியைக் காணவில்லை எனத் தேடியபோது, கிணற்றினுள் இவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

இவர் விரைவில் வெளிநாடு செல்லவிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ரா)

## நினைவுத் தூபிக்கு எதிரான வழக்கு திருமலை நீதிமன்றில் தள்ளுபடி

நிலாவெளி - கோபாலபுரம் சந்தியில் அமைக்கப்பட்ட புலிகளின் நினைவுத்தூபியை அகற்றக்கோரி குச்சவெளிப் பொலிஸார் தாக்கல் செய்த வழக்கு நேற்றுமுன்தினம் திருமலை நீதிவான் எஸ். தியாகேந்திரனால் தள்ளுபடி செய்யப்பட்டது.

நிலாவெளி அரசியற் பொறுப்பாளர் தூயவனுக்கு எதிரான பிடியாணையும் ரத்துச்செய்யப்பட்டுள்ளது. தூயவனின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சிவபாலன் - இத்தூபி முன்பே அமைக்கப்பட்டது, போரின் போது சேதமடைந்ததையே இப்போது புனரமைத்து திறக்கின்றனர் என எடுத்துக்கூறினார். இவ்விவகாரத்தை கடற்படையினரே பெரிதுபடுத்தியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

### அவசர கலந்துரையாடல்

யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வித்துறை 1 ஆம், 2 ஆம், 3 ஆம் அணி மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று காலை 9 மணிக்கு உடற்கல்வித்துறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் சகல மாணவர்களையும் கலந்துகொள்ளும்படி உடற்கல்வித் துறைத் தலைவர் அறிவித்துள்ளார்.

## ஓய்வூதியக் கொடுப்பனவில் புதிய நடைமுறை அமுல்

ஓய்வூதியக் கொடுப்பனவுகள் இனிமேல் புதிய நடைமுறையின் கீழ் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் ஓய்வூதியப் பட்டியல்கள் சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களில் இருந்து நேரடியாகத் தபால்மூலம் ஓய்வூதியர்களுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன.

இந்தப் பற்றுச்சீட்டை ஓய்வூதியம் பெறுவோர் வழமைபோல் வங்கிகள், தபாலகங்களில் சமர்ப்பித்து ஓய்வூதியப் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

பழைய நடைமுறையின்படி ஓய்வூதியப்பட்டியல் சம்பந்தப்பட்ட வங்கிகள், தபாலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு, ஓய்வூதியம் பெறுபவர் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று தங்களது அடையாளங்களை நிரூபித்து தமது ஓய்வூதியத் தொகையைப் பெற்று வந்தனர்.

ஓய்வூதியக் கொடுப்பனவுகளில் கடந்தகாலங்களில் இடம்பெற்ற மோசடிகள் காரணமாகவே இந்தப் புதிய நடைமுறை உடனடியாக அமுலுக்குக் கொண்டுவரப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.



நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சிகள் நடத்திய அரசுக்கெதிரான சத்தமெழுப்பும் போராட்டத்தின் மேலும் சில காட்சிகள்.

## புரிந்துணர்வு உடன்படிக்கையை எதிர்த்து சனியன்று ஆர்ப்பாட்டம்!

### ஜே. வி. பி. ஏற்பாடு

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் ஆர்ப்பாட்டங்களை ஜே.வி.பி எதிர்வரும் சனிக்கிழமை நடத்தவுள்ளது.

புரிந்துணர்வு உடன்பாடு கைச்சாத்திடப்பட்டு எதிர்வரும் சனிக்கிழமையுடன் ஒரு ஆண்டு நிறைவு பெறுகின்றது.

நாட்டைப் பிளவுபடுத்தி ஈழ ராஜ்யம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு அந்த உடன்பாடு வழிசமைக்கின்றது என்றும், இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலுமே இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்துவதாகவும் ஜே.வி.பி. அறிவித்திருக்கின்றது.

இதேவேளை, நாளையதினம் எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றையும் ஜே.வி.பி. நடத்தவுள்ளது.

# வாழ்க வளமுடன்

## நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

மூன்றாவது அகவையில்

HAPPY BIRTHDAY



பெயர் : ஸ்ரீ.அருள்ராஜ்
முகவரி: அன்பு பவனம்,
மந்துவில் மேற்கு.



மூன்றாவது அகவையில்



பெயர் : சி.சோபனா
முகவரி: மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------------

முகவரி:------------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளன.

------------------------
பெற்றார் ஒப்பம்


## ஆசிரிய கலாசாலை சமூகம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 12 ஆம் திகதி மானிப்பாயில் நடைபெற்ற இராணுவத்தின் யுத்தநிறுத்த மீறல் சம்பவத்தில் பலாலி ஆசிரிய கலாசாலையின் முதலாம் வருட விவசாயநெறி ஆசிரிய மாணவனான இராமையா சங்கரனும், போராளிகளும், பொது மக்களும் கொடுமையான முறையில் தாக்கப்பட்டுள்ளனர்.

இத்தகைய நிகழ்வு கலாசாலை சமூகத்தால் சகிக்க முடியாததாகவும், ஆத்திரமூட்டுவதாகவும், சமாதான ஒப்பந்தத்திற்கு முரணானதாகவும் காணப்படுகிறது. இவ்வாறான நிகழ்வு இனிமேலும் நடைபெறாதிருக்கச் சம்பந்தப்பட்ட அனைவரும் பொறுப்பேற்க வேண்டும் எனப் பலாலி ஆசிரிய கலாசாலை சமூகம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நெல்லியடி மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா

(நெல்லியடி)

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா எதிர்வரும் 22 ஆம் திகதி அதிபர் எஸ்.சேதுராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். அரசாங்க அதிபர் சி.பத்மநாதன் கலந்துகொண்டு பரிசில்களை வழங்குவார்.

## விவசாய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மாசி மாதத்துக்கான விவசாயக் குழு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவிருப்பதாக வலி.வடக்குப் பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

# நீரிழிவு நோய் DIABETES

பகுதி 24 - ச.ஆ.கோபாலமூர்த்தி.

## கண்மூடித்தனமான பின்பற்றல்களால் நோய்க்கு ஆளாதல்

சைவசமயிகள் பலரும் ஏனையோர் செய்கிறார்கள். நாங்களும் செய்கிறோம் எனக்கூறிக் கொண்டு பல நோய்க்குஏதுவான கருமங்களைச் செய்கிறார்கள். அவற்றுள் முக்கியமான இரண்டைக் குறிப்பிடவேண்டியது அவசியமாகும்.

(1) ஆசௌசம் (துடக்கு) அகற்றுவதற்கு பசுவின் பால், தயிர், மோர், கோசலம் (பசுவின் சிறுநீர்), கோமயம் (சாணம்) என்பவற்றைக் கலந்து பஞ்சகவ்வியம் எனப் பெயரிட்டு அதனைப் பருகுகிறார்கள். பசு ஓர் சிறந்த மிருகம். ஆனால், அந்தமிருகம் தனது உடலுக்குத் தேவையற்றது எனக் கழிக்கின்ற சிறுநீரையும் சாணத்தையும் கலந்து பருகுவது புத்திசாதுரியமான நடவடிக்கை ஆகாது. பசுவின் சிறுநீரில் பல்வேறு கிருமிகள் இருக்கும். சாணத்தில் கிருமிகள் மாத்திரமன்றிக் குடற் புழுக்களும் குடற புழு முட்டைகளும் இருக்கும். இவற்றை நாமாகவே அருந்துவது தற்கொலை முயற்சியாகும். இது தேவைதானா? எளிதில் நோய்வாய்ப்படும் தன்மை கொண்ட நீரிழிவு நோயாளிகள் இந்த மூட நடவடிக்கையைப் பின பற்றிப் பலவேறு நோய்களுக்கு ஆளாகாதிருக்க வேண்டும். சிலர், வேப்பம் பஞசகவ்வியம் என, வேப்பம் தளிர், வேப்பம் இலை, வேப்பம்பட்டை, வேப்பிலைக் காம்பு, வேப்பம்பூ என்பவற்றை அவித்துக் குடித்து ஆசௌசத்தை (துடக்கு) அகற்றுகிறார்கள். இது முன்னைய நடவடிக்கையைவிடச் சிறந்த நடவடிக்கையாகும்.

(2) பசுக்களுக்கு கசநோய், புறூசலோசிஸ் போன்ற நோய்கள் ஏற்படுவதுண்டு. இந்த நோயுடைய பசுக்களின் பாலில் இந்த நோய்க் கிருமிகள் இருக்கலாம். பசுப்பாலைக் காய்ச்சிக் குடித்தால் இந்தக் கிருமிகள் இறந்துவிடும். கோவிலுக்குப் பால்தானம் செய்பவர்கள் பலரும் பாலைக் காய்ச்சிக் கொடுப்பதில்லை. காய்ச்சாத பாலினால் சுவாமிக்கு அபிடேகம் செய்யப்படும். அபிடேகம் செய்த தீர்த்தம் என வழங்கப்படும் தீர்த்தத்தில் காய்ச்சாத பாலும் அதிலுள்ள கிருமிகளும் கலந்திருக்கலாம். எம்முன்னோர் இறைவனை நீராட்டிய நீரில் தாமும் நீராடுகிறோம் என்ற பாவனையில் தீர்த்தத்தைத் தமது உடலின் மீது தெளித்தனர். பிற்காலத்தில் சிலர், தீர்த்தத்தைக் கண்களில் ஒற்றியும், வாயினால் அருநதியும் காதினுள் சொட்டியும் மூன்று புலன்களாலும் இறை அருளைத் தமது உடலுட் செலுத்தினால் அதிக அனுக்கிரகம் கிடைக்குமெனக்கூறி அவ்வாறு செய்தனர். இதனைக் கண்மூடித்தனமாகப் பலரும் பின்பற்றுகின்றனர். புறூசெலோசிஸ் பசுப்பாலின் மூலம் மனிதருக்குத் தொற்றும். மரணத்தை ஏற்படுத்தத்தக்க பேய்க் காய்ச்சலை ஏற்படுத்தி மாதக் கணக்கில் வாட்டலாம். நீரிழிவு நோயாளிகளுக்கு கசமும், புறூசலோஸிசும் ஏற்படின் ஆபத்தான விளைவுகள் தோன்றலாம். எனவே, தீர்த்தத்தைப் பருகாது உடல்மீது தெளித்துவிடல் நன்று.

சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் பசுக்களின் (கன்று ஈனலைத் தொடர்ந்து வெளிவருகின்ற) இளங்கொடியைச் சுடலையிலும், வீதி ஓரஙகளிலும் நின்ற ஆலமரங்களில் தொங்கவிடும் மூடப் பழக்கம் இருந்தது. இவ்வாறு தொங்கவிடப்பட்ட இளங்கொடிகளிலிருந்த புறூசலோஸிஸ் கிருமிகள் ஆலமரத்தின் கீழ் சொரிந்தன. அக்காலத்தில் செருப்பு அணிவோர் மிகச் சிலராகவே இருந்தனர். செருப்பு அணியாதோரின் கால்களில் முட்கள் குற்றின. முள் குற்றிய காயத்துடன் ஆலமரத்தடிக்குச் செல்கையில், முட்காயங்களின் ஊடாக புறூசலோஸிஸ் கிருமிகள் உட்சென்று புறூசலோஸிஸ் காய்ச்சலை ஏற்படுத்தின. இதனை ஆலமரத்தில் பேய் இருப்பதாகவும், அந்தப் பேய் பிடிப்பதாலேயே இந்தக் காய்சல் ஏற்படுவதாகவும் கூறினா. அக்காலத்தில் இதற்கு மருந்து இல்லாததால் இறப்பே முடிவாகியது.

(தொடரும்)




நமது ஈழநாடு வழங்கும்




# உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

MEGA பரிசுப் போட்டி

முதற்பரிசு - 25,000

வழங்குவோர்: இரத்தினம் ஊர்தி சேவைத்தளம்
[இரத்தின கோபால்ஸின் இணைந்த நிறுவனம்]
32, சிறாம்பியடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்
அனைத்து வகையான மோட்டார் சைக்கிள்களும் நவீன இயந்திரங்களால் சேவிஸ் செய்து கொடுக்கப்படும்.

இரண்டாம் பரிசு - 15,000



வழங்குவோர்: 1. ஜொனெக்ஸ் மல்ரி பலஸ்
YONEX MULTI PALACE
விளையாட்டு உபகரண விற்பனையாளர்கள்.
76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

2. சமுத்திரா ரேட்ஸ் (லிமிட்டட்)
டீசல் என்ஜின், நெல் குற்றும், மா அரைக்கும் இயந்திரங்கள், உதிரிப்பாக விற்பனையாளர்கள்.
3/2 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்

மூன்றாம் பரிசு - 10,000

வழங்குவோர்: சந்தியா மல்ரிகோட்யாட்
531, பருத்தித்துறை வீதி, நல்லூர், பிரதான வீதி, பண்டத்தரிப்பு
Fancy goods, gift items, fevicryl & acron paint items.



இன்னும் ஏராளமான ஆறுதல் பரிசுகள்!
வினாக்கொத்துக்கு விடை தந்து பரிசுகளை அள்ளிச் செல்லுங்கள்!!

## உலகக் கிண்ண கிரிக்கெட் - 2003

வெல்லுங்கள்...! அள்ளுங்கள்...!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் பற்றிய வினாக்களுக்கு விடை தந்து பணப்பரிசுகளை, வெகுமதிகளை உங்களதாக்குங்கள்.

1. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 1975 இல் முதன் முதலாக எந்த நாட்டில் நடைபெற்றது? (.....................)
2. இரண்டு முறை தொடர்ச்சியாக உலகக் கிண்ணத்தை வென்று மூன்றாவது முறையாக வெல்லும் வாய்ப்பை இழந்த அணி எது? (.....................)
3. 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள் எந்தெந்த நாடுகளில் நடைபெறப்போகின்றன? (.....................)
4. 2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆட்டத்தொடர் நாயகனாக (MAN OF THE SERIES) விளங்கப்போகும் வீரன் யார்? (.....................)
5. 2003 உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்ளப்போகும் அணி யாது? (.....................)

பூர்த்தி செய்துவிட்டீர்களா...? இது போன்ற ஐந்து கூப்பன்களை ஒரே வகையில் பூர்த்தி செய்து, எதிர்வரும் மார்ச் 06 ஆம் திகதிக்கு முன்பாக -

'உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003'
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


என்னும் முகவரிக்குத் தபாலிலோ, நேரிலோ அனுப்பி வையுங்கள்.

பெயர்: ------------------------------------------
வயது: ------------------------------------------
முகவரி: ------------------------------------------
------------------------------------------



*சரியான விடைகளை எழுதுபவர்களிலிருந்து அதிர்ஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.*

*போட்டி முடிவுகள் மார்ச் 28 ஆம் திகதியன்று 'நமது ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகும்.*




# மாணவர் மலர்

புவியியல்

# மானிடப் புவியியல்

## விமானம் கட்டும் தொழில்

1. ஐக்கிய அமெரிக்காவில் விமானம் கட்டும் தொழில் நடைபெறும் நகரங்களைப் படத்தில் குறித்துப் பெயரிடுக.




| | | |
|---|---|---|
| 1. | கன்பர்ட் (Hanford) | தென் கலிபோர்னியக் கரையோரம் |
| 2. | லோங் பீச் (Long Beach) | |
| 3. | ஹொலிவூட் (Holly Wood) | |
| 4. | சன்ரா பார்பறா (Santa Barbara) | |
| 5. | சன்ரா மொனிகா (Santa Monica) | |
| 6. | மிக்சிக்கன் (Michigan) | பேரேரிக் கரையோரம் |
| 7. | பபுலோ (Bufflo) | |
| 8. | ஓகையோ (Ohio) | |
| 9. | நியுயோர்க் (New york) | அந்திலாந்திக் கரையோரம் |
| 10. | கொனற்றிக்கட் (Connecticut) | |
| 11. | போல்ரிமோர் (Baltimore) | |

2) ஐக்கிய அமெரிக்காவில் விமானம் கட்டும் தொழிலின் வளர்ச்சிக்குப் பங்களித்த காரணிகளை எடுத்தாராய்க.

◆ இந்நாட்டில் விமானம் கட்டும் தொழில் கலிபோர்னியா, பேரேரி, அத்திலாந்திக் கரையோரப் பிரதேசங்களில் வளர்ச்சியடைந்துள்ளது. இங்கு விமானக் கட்டுமானத் தொழில் வளர்ச்சியடைந்தமைக்கு - விமானக் கட்டுமானத் தொழில் நிலையங்களை நிறுவிக் கொள்வதற்கும், உற்பத்தியாக்கப்படும் விமானங்களை ஓடிப்பார்ப்பதற்கான ஓடுதளம் அமைப்பதற் [illegible] பொருத்தமான தொடரான, பரந்த சமநிலங்கள் அமைவுற்றிருந்தமை முதலாவது காரணியாகும்.

உதாரணம் : கலிபோர்னியா பிரதேசம்

◆ அந்நிலங்களுக்குரிய வளிமண்டலத்தில் முகில்அற்ற, குழப்பமற்ற, சீரான வளியமுக்க இயல்புகளைக் கொண்ட தெளிந்த வானமும், சீரான காலநிலையும் நிலவப்பெற்றமை.

உதாரணம் : கலிபோர்னியாப் பிரதேசத்தில் மத்தியதரைக் காலநிலை இயல்பு நிலவப்பெற்றமை.

◆ இந்நாட்டில் விமானக்கட்டுமானத்திற்கும், வெளிக்கட்டுமானத்திற்கும் வேண்டிய மூலப்பொருள் உற்பத்தியும் அவற்றின் கிடைப்பனவுகள்.

உதாரணம் : அலுமினியம் வெளிக்கட்டுமானத்திற்கு இன்றியமையாதனவாகும்.

◆ விமானத்தின் வெளிக்கட்டுமான ஒட்டு நடவடிக்கைகளுக்கும், அலுமினிய உருக்கிற்கும் வேண்டிய வலுச்சக்தி உற்பத்திகள் உந்நாட்டில் வளர்ச்சியுற்றிருந்தமை.

உதாரணம் : நீர்மின், இயற்கைவாயு உற்பத்திகள்.

என்னும் புவியியற் காரணிகள் சாதகமாக அமைவு பெற்றிருப்பதுடன், சமூகப் பொருளாதாரக் காரணிகளிலும் சாதகமாக அமைவுற்றிருந்தமை. இவற்றுள் இரும்புருக்குக் கைத்தொழிலில் விருத்தியடைந்திருந்தமையால் விமான இயந்திரப்பொறி உற்பத்திக்கு வேண்டிய தரம்மிக்க உருக்குகளையும், இணைப்புக்களிற்கான உருக்குப் பாலச்சட்டங்களையும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தமை, அலுமினிய உருக்குக் கைத்தொழில் வளர்ச்சியடைந்திருந்தமை, விமானக்கட்டுமானக் கோர்ப்புத் தொழிலுக்கு வேண்டிய உயர் தொழில்நுட்பங்கள் வளர்ச்சியடைந்திருந்ததுடன் பயன்பாடுகளிற்குப் பொருத்தமான வகையில் விமானங்களை வடிவமைத்தல், செல்லும் வேகம், செல்லும் தூரம், பறக்கும் உயரம், கொண்டு செல்லக்கூடிய நிறையின் அளவு, எரிபொருளின் கொள்ளளவு, அதன் சிக்கனம் என்பவற்றுடன் தொடர்புடைய தொழில்நுட்பங்கள் வளர்ச்சியடைந்திருந்தமை.

◆ விமானக்கட்டுமானத்திற்கு வேண்டிய இயந்திரப் பொறியியல் அறிவுடைய வினையாற்றல் மிக்க, தொழில்நுட்ப நிபுணத்துவம் மிக்க, நீண்டகால அனுபவமிக்க தொழிலாளர்களை இலகுவாகப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்ததுடன் - தொழிலாளர் புதிய தொழில்நுட்பங்களிற்கான ஆய்வு முயற்சியில் ஆர்வமிக்கவர்களாகக் காணப்படுவதுடன், பயன்பாடுகளிற்குப் பொருத்தமான வகையில் விமானங்களை உற்பத்திசெய்யும்திறன் காணப்பட்டமை.

உதாரணம் : யுத்தவிமானம், பயணிகள் விமானம், உளவறியும், ஆய்வு செய்யும் விமானம், சரக்கு விமானம், தனியாள் விமானம்.

◆ விமான உதிரிப்பாகங்களைக் கைத்தொழிற் பிரதேசங்களில் இருந்து விமானக் கோர்ப்பு நிலையங்களிற்கு எடுத்துச்செல்லக்கூடிய சிறந்த போக்குவரத்து வசதிகள் அமைவுற்றிருந்தமை.

உதாரணம் : பேரேரிக் கைத்தொழில் நிலையங்களில் உற்பத்தி செய்யும் உதிரிப்பாகங்கள், உருக்குகள் போன்றவற்றை அத்திலாந்திக் கரையோர விமானக் கோர்ப்பு நிலையங்களிற்கு எடுத்து வருவதற்கான பேரேரி, ஹட்சன் நதி மூலமான நீர்வழிப் போக்குவரத்து வாய்ப்பளித்தன.

◆ கைத்தொழிற் புரட்சியின் பின் ஏனைய கைத்தொழிற்துறையில் முதலீடுகள் ஈடுபடுத்தியதைப் போன்று விமானம் கட்டும் தொழிலிலும் பொருந்தொகையான அரசு, தனியார் முதலீடுகள் ஈடுபடுத்தியமை அத்துடன் அவற்றின் சிறந்த நிர்வாக, முகாமைத்துவ முயற்சிகள்.

◆ யுத்த காலங்களில் அதிகரித்த விமானங்களின் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கு அதிகளவிலான விமானங்களைக் குறுகிய காலத்திற்குள் கட்டி முடிக்க வேண்டிய கட்டாய தேவையிருந்தமை. இதனால் அந்த விமானம் உற்பத்தி செய்த அனுபவங்கள் ஏற்பட்டமை.

உதாரணம் : 1 ஆம் உலகமகா யுத்தத்தில் 16,000 விமானங்களும், 2 ஆம் உலகமகா யுத்தத்தில் 15,000 இற்கு மேற்பட்ட விமானங்களையும் உற்பத்தி செய்திருந்தமை - உள்ளூரிலும், சர்வதேச ரீதியாகவும் விமானம் கட்டும் தொழில் வளர்ச்சியடைந்திருந்தமையால் உள்ளூர், வெளியூர்ப் பயணிகள் போக்குவரத்திலும் வான்வழி அஞ்சல் போக்குவரத்திலும், வர்த்தகத்திலும் விமானங்களின் பயன்பாடுகள் அதிகரித்திருந்தமையால் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் அதிகரித்த சந்தைவாய்ப்புக்கள் முதலான சமூக, பொருளாதாரக் காரணிகளும், புவியியற் காரணிகளும் சாதகமாக அமைவுற்றிருந்தமை இந்நாட்டில் விமானம் கட்டும் தொழிலின் வளர்ச்சிக்குப் பங்களித்துள்ளன. இத்தகைய காரணிகளால் வளர்ச்சியடைந்துள்ள மொத்த உற்பத்தியில் கலிபோர்னியாக் கரையோரத்தினால் 15%தையும், அத்திலாந்திக் கரையோரத்தினால் 40% தையும் உற்பத்தி செய்கின்றது.

3) விமானம் கட்டும் தொழிலின் அண்மைக்காலப் போக்குகளைச் சுருக்கமாக ஆராய்க.

◆ விமானம் கட்டும் தொழில் அண்மைக்காலத்தில் நவீன கோர்ப்புத் தொழில் அமைப்பு முறையில் வளர்ச்சியடைந்திருப்பினும் அவற்றிற்கான ஆர்வம் முற்பட்ட காலத்துடன் ஒப்பிடுகையில் குறைவடைந்து வருகின்றபோதும், அண்மைக்காலத்தில் உலகளாவிய ரீதியில் பயணிகள் விமானங்களும், யுத்த விமானங்களுமே அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகின்றது. அண்மைக்காலத்தில் இத்தகைய விமானங்களை உற்பத்தி செய்வதில் நாடுகளிற்கு இடையில் காணப்படும் அதிகரித்த போட்டியினால் அதிநவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி நவீனத்துவமிக்க அதிக வசதிகள் கொண்ட விமானங்கள் உற்பத்தி செய்வதுடன், குறுகிய நேரத்தில் நீண்டதூரம் செல்லக்கூடிய விமானங்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

உதாரணம் : ஒலியிலும் வேமாகச் செல்லக்கூடிய கொன்கோட், சுப்பர் சொனிக் விமானங்களுடன் அண்மையில் புதிதாக கண்டறியப்பட்ட ஹைபர் சுப்பர்சொனிக் விமான உற்பத்திகளையும் குறிப்பிடலாம்.

◆ அண்மைக்காலத்தில் பெரியளவிலான விமானங்கள் மட்டுமன்றி தனியாள் பயணம் செய்யக்கூடிய மிகச்சிறியளவிலான விமானங்களும், உல்லாசப் பொழுதுபோக்கு, சுற்றுலாவிற்கான விமானங்களும் குறைந்த தூரத்தில் தரையில் ஓடிப் பறக்கக்கூடிய விமானங்களும், ஹெலிகப்டர்களும் அதிகளவு உற்பத்தி செய்யப்படுகின்றன. இவற்றுடன் சர்வதேசரீதியாக அஞ்சல் போக்குவரத்து, தொடர்பாடல், வர்த்தகம் போன்றவற்றில் விமானங்களின் பயன்பாடுகள் அதிகரிப்பதனால் விமான உற்பத்தி அளவுகளும் அதிகரித்து வருகின்றன.

◆ இவ்வாறான வளர்ச்சியைப் பெற்றுள்ளபோதும் அண்மைக்கால விமான உற்பத்திப் போக்கில் உற்பத்திக்கான ஆர்வம் ஒப்பீட்டளவில் குறைவடைந்து வருகின்றது. இதற்கு நவீன தொழில் நுட்பமிக்க நவீன புதிய விமானங்களைக் கட்டிமுடிப்பதற்குப் பல மில்லியன் டொலர்கள் செலவு செய்ய வேண்டியிருப்பதனாலும், தொழிலாளர்களின் சம்பள உயர்வுகளினாலும், மூலப்பொருட்களின் விலை உயர்வினாலும் உற்பத்திச் செலவுகள் அதிகரித்தல், அதிகரிக்கும் உற்பத்திச் செலவிற்கேற்ப இலாபம் கிடைக்கப்பெறாமை. விமானம் ஒன்றை உற்பத்தி செய்வதற்கு 1 1/2 - 2 1/2 ஆண்டுகள் செல்வதனால் பெருந்தொகையான முதலீடுகள் பல வருடங்களுக்கு முடக்கப்படுவதனாலும் விமானம் கட்டும் தொழிலுக்கான முதலீடுகள் - புதிய முதலீடுகளுக்கான ஆர்வம் குறைவடைந்து வருகின்றன.

உதாரணம் : U.S.A., U.K.

◆ அதிகரித்த உற்பத்திச் செலவானது விமானங்களின் விலையினை அதிகரிக்கச் செய்தமையால் விமாங்களைக் கொள்வனவு செய்யும் அளவுகள் குறைவடைந்து வருகின்றன.

உதாரணம் : விலையுயர்வின் காரணமாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளினால் விமானங்களைக் கொள்வனவு செய்யும் அளவு குறைவடைந்துள்ளது.

◆ அண்மைகாலங்களில் விமானக் கட்டுமானத்திற்ான மூலப்பொருள் பயன்பாட்டில் அலுமினியத்திற்கு பதிலாக பிரதியீட்டு மூலப்பொருள் பயன்பாடு அதிகரித்து வருகின்றன.

உதாரணம் : டைற்ரேனியம்.

◆ விமான உற்பத்தியில் சிறியரக தனியாள் விமானங்களினதும் ஹெலிகப்டர்களினதும் உற்பத்திகள் பாவனைகள் அதிகரித்து வருவதனாலும் நவீன புதிய விமானங்களை கட்டுவிப்பதனாலும், பழையரக விமானங்களை விற்பனை செய்யமுடியாது இருப்பதனால் உற்பத்தியாளர்கள் நட்டத்தை எதிர்கொள்ள வேண்டியர்வர்களாக உள்ளனர். விமான உற்பத்தியில் அதிகரித்துவரும் உற்பத்திச் செலவினாலும், குறைந்த இலாபத்தினாலும் அதிகரிக்கும் பெற்றோலிய விலை உயர்வுகளாலும் விமானம் கட்டும் தொழில் பாதிக்கப்படுவதனால், புதிய முதலீட்டாளர்கள் உற்பத்தியில் ஈடுபடுவதற்கான ஆர்வம் குன்றி பின் தயங்குபவர்க ளாகவும் காணப்படுகின்றனர்.

எனவே, அண்மைக்கால விமானங்கட்டும் தொழில் நவீனமயப்படுத்தப்பட்ட வளர்ச்சியை பெற்றுள்ள போதும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு ஆர்வம் குறைவடைந்து வரும் வேளையில் அவற்றினைக் கருத்திற் கொண்டும், குறைந்த எரிபொருளில் சிக்கன பயன்பாட்டிற்கேற்ப துரித உந்துசக்திமிக்க பொறியியரந்திரங்களைக் கண்டறிந்து உற்பத்தி செய்யவேண்டிய அவசியம் அண்மைக்காலத்தில் முதன்மை பெற்றிருக்கும்வேளை, மாற்றுவள சக்தியில் இயங்கக்கூடிய தொழில்நுட்பங்கள் விமானங்கட்டும் தொழிலில் மேலும் அதிநவீன வளர்ச்சியினை ஏற்படுத்தும்.

P.S.குமரன்
B.A.(Hons) Geo.Spl.

# க.பொ.த. உயர்தரம்

# பகுதிப்படுத்தித் தொகையிடல்

## (Integration by Parts)

u, v என்பவை x ஐ மாறியாகக் கொண்ட இரு சார்புகள் என்போம். அவற்றின் பெருக்கல் uv ஐ வகையிடுவதை நோக்குவோம்.

$$\frac{d}{dx}(uv) = u.\frac{dv}{dx} + v.\frac{du}{dx} \qquad \text{-------- (1)}$$

இதனை, பெருக்கம் uv ஐ வகையிடும் சூத்திரம் என்கிறோம்.
இதனை மாற்றி எழுதுவதன் மூலம்

$$u.\frac{dv}{dx} = \frac{d}{dx}(uv) - v.\frac{du}{dx}$$

இருபக்கமும் x குறித்து தொகையிட்டால்,

$$\int u.\frac{dv}{dx}\,dx = \int \frac{d}{dx}(uv)\,dx - \int v.\frac{du}{dx}\,dx$$

ஆனால் $\int \frac{d}{dx}(uv)\,dx = d(uv) = uv$

எனவே,

$$\boxed{\int u\frac{dv}{dx}.dx = uv - \int v.\frac{du}{dx}.dx} \qquad \text{-------- (2)}$$

இதுவே பெருக்கலைத் தொகையிடும் சூத்திரம். இச் சூத்திரத்தைப் பயன்படுத்துவதில் சிறிது சிரமம் உண்டு. இதனை வேறு ஓர் சூத்திரமாக மாற்றுவோம்.

சூத்திரம் (2)ல் $u = I,\ \frac{dv}{dx} = II$ என்போம்.

எனவே, $V = \int II\,dx$

$= II$ இன் தொகையீடு (Int II) என்போம்.

அத்துடன், $\frac{du}{dx} = \frac{dI}{dx}$

$= I$ இன் வகையீடு (DC I)

இக்குறியீடுகளைச் சூத்திரம் IIஇல் பிரதியிட்டால்

$$\int I.II\,dx = I.(\text{Int }II) - \int (\text{DC }I).\text{Int }II\,dx \qquad \text{-------- (3)}$$

மேற்படி சூத்திரம் (3)ஐப் பயன்படுத்தும்போது, சில சார்புகளை I எனவும் சில சார்புகளை II எனவும் வைத்துக் கொண்டு தொகையிடல் அவசியமாகிறது. இவற்றை பொருத்தமான முறையில் தெரிவு செய்யாவிட்டால் தொகையிட இயலாது போகும்.

உதாரணம் (1),

$x\,e^x dx$ என்பதில் $e^x$ I என்றும் $x \equiv II$ என்றும் வைத்துக்கொண்டு

தொகையிட்டால்,

$$\int x\,e^x dx = e^x \int x dx - \int \left\{\left[\frac{d}{dx}e^x\right] \int x dx\right\} dx$$

$$= e^x.(x^2/2) - \int ex.(x^2/2)\,dx$$

$\int e^x.x^2/2\,dx$ இன் தொகையீடு காண்பது $\int xe^x\,dx$

இன் தொகையீட்டைக் காண்பதிலும் சிரமமாகும். இது நாம் I ஐயும், II ஐயும் தவறாக தேர்ந்தெடுப்பதனால் ஏற்படுகிறது.

ஆனால், அதற்கு மாறாக $x \equiv I$ என்றும், $e^x \equiv II$ என்றும் தேர்ந்தெடுப்போமானால்,

$$\int x\,e^x dx = x\int e^x dx - \int \left\{\left[\frac{d}{dx}x\right] \int e^x dx)\right\} dx$$

$$= x\,e^x - \int e^x dx$$

$$= x\,e^x - e^x$$

$$= .(x-1)e^x + c$$

இங்கு C-தொகையீட்டு மாறிலி.

உதாரணம் (2),

$\int x \cos x\,dx$ என்பதில்

$\cos x \equiv I$ என்றும், $x \equiv II$ என்றும் வைத்துக் கொண்டு தொகையிட்டால்,

$$\int x\cos x\,dx = \cos x \int x dx - \int \left\{\frac{d}{dx}\cos x . \int x dx\right\} dx$$

$$= \cos x . (x^2/2) - \int (-\text{Sin}x).(x^2/2)\,dx$$

இதில்,

$\int x^2/2\ \text{Sin}x.dx$ என்பதைத் தொகையிடுவது,

$\int x\cos x\,dx$ ஐ தொகையிடுவதிலும் சிரமமானது.
இதுவும் Iஐயும், IIஐயும் தவறாகத் தேர்ந்தெடுப்பதால் ஏற்பட்டது.

$x \equiv I$ எனவும், $\text{Cos}x \equiv II$ எனவும் தேர்ந்தெடுத்தால் இலகுவாகத் தொகையிடலாம்.

$$\int x\cos x\,dx = x.\int \cos x\,dx - \int \left\{\frac{d}{dx}x.\left[\int \cos x\,dx\right]\right\} dx$$

$$= x\ \sin x - \int \sin x.dx$$

$$= x\ \sin x - (-\cos x)$$

$$= x\ \sin x + \cos x + C \longleftarrow \text{தொகையீட்டு மாறிலி.}$$

கீழ்க்காணும் அட்டவணையில் சில முக்கியமான சார்புகளின் பெருக்கல்களில் எதை I என்றும் எதை II என்றும் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற விபரம் தரப்படுகிறது. இவற்றை நினைவில் கொண்டால் இலகுவாகவும் விரைவாகவும் தொகையிடலை மேற்கொள்ளமுடியும்.

n என்பது ஓர் நேர் முழு எண்ணாகும்போது,

| சார்புகளின் பெருக்கல் | சார்பு I | சார்பு II | |
|---|---|---|---|
| $x^n \sin ax$ | $x^n$ | $\sin ax$ | n≠0 இற்கு |
| $x^n \cos ax$ | $x^n$ | $\cos ax$ | |
| $x^n e^{ax}$ | $x^n$ | $e^{ax}$ | |
| $x^n \sin^{-1}x$ | $\sin^{-1}x$ | $x^n$ | n=0 உட்பட |
| $x^n \cos^{-1}x$ | $\cos^{-1}x$ | $x^n$ | |
| $x^n \tan^{-1}x$ | $\tan^{-1}x$ | $x^n$ | |
| $x^n (\log x)^p$ | $(\log x)^p$ | $x^n$ | |
| $e^{ax}\cos bx$ | $e^{ax}$ அல்லது $\cos bx$ | $\cos bx$ அல்லது $e^{ax}$ | |
| $e^{ax}\sin bx$ | $e^{ax}$ அல்லது $\sin bx$ | $\sin bx$ அல்லது $e^{ax}$ | |

உதாரணம் (3),

$\int x^n (\log x)\,dx$

$$\int x^n(\log x)\,dx = \int (\log x).x^n dx$$

$$= \log x \int x^n dx - \int \left\{\left[\frac{d}{dx}\log x\right] \int x^n dx\right\} dx$$

$$= \log x\left\{\frac{x^{n+1}}{n+1}\right\} - \int \frac{1}{x}\,\frac{x^{n+1}}{n+1}\,dx$$

$$= \frac{1.}{n+1}x^{n+1}\log x - \frac{1}{n+1}\int x^n dx$$

$$= \frac{1.}{n+1}x^{n+1}\log x - \frac{1.}{(n+1)^2}x^{n+1} + c$$

உதாரணம் (4),

$\int x^2 \sin^{-1} x dx$

$$\int x^2\sin^{-1}x dx = \int \sin^{-1}x.x^2 dx$$

$$= \sin^{-1}x.\int x^2 dx - \int\left\{\frac{d}{dx}(\sin^{-1}x).\int x^2 dx\right\} dx$$

$$= \sin^{-1}x.\frac{x^3}{3} - \int \frac{1}{\sqrt{1-x^2}}.\frac{x^3}{3}\,dx$$

$$= \frac{x^3}{3}\sin^{-1}x - \frac{1}{3}\int\frac{x^3}{\sqrt{1-x^2}}\,dx$$

$t = \sqrt{1-x^2}$ எனப் பிரதியிடுக,

$$\frac{dt}{dx} = \frac{-2x}{2\sqrt{1-x^2}}$$

$$\Rightarrow \frac{xdx}{\sqrt{1-x^2}} = -dt$$

மேலும் $1-x^2 = t^2$
$x^2 = 1-t^2$

$$\int x^2\sin^{-1}x\,dx = \frac{x^3}{3}\sin^{-1}x - \frac{1}{3}\int(1-t^2)(-dt)$$

$$= \frac{x^3}{3}\sin^{-1}x + \frac{1}{3}\left\{t - \frac{t^3}{3}\right\}$$

$$= \frac{x^3}{3}\sin^{-1}x + \frac{t}{9}(3-t^2)$$

$$= \frac{x^3}{3}\sin^{-1}x + \frac{\sqrt{1-x^2}}{9}\{3-(1-x^2)\}$$

$$= \frac{x^3}{3}\sin^{-1}x + \frac{(x^2+2)\sqrt{1-x^2}}{9} + c$$

நா.அம்பிகைபாகன் (B.Sc.)
ஆசிரியர் (காரைநகர் இந்துக் கல்லூரி)
கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

நயன்இல சொல்லினும் சொல்லுக
சான்றோன்
பயன்இல சொல்லாமெ நன்று.
- திருக்குறள்.

# நமது நோக்கு

## இலவசக் கல்விப் பீற்றலும் அன்பளிப்புக் கலாசாரமும் !

பாடசாலைகளில் பரவிவந்த ஒரு விஷக்காய்ச்சலுக்குத் தடைமருந்தை - சுற்றுநிருபம் மூலம் வட- கிழக்கு மாகாணக் கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது.

மாணவர்களை பாடசாலைகளுக்கு அனுமதிக்கும்போது, உதவி நிதிகளோ, அன்பளிப்புக்களோ வற்புறுத்திப் பெறுவது விரோதச் செயல். அவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடும் அதிபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை தரும் சுற்றுநிருபத்தை விடுத்துள்ளார் மாகாணக் கல்விப் பணிப்பாளர்.

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் - புதிய மாணவர்களைச் சேர்க்கும்போது - பெற்றோரிடமிருந்து நிதி அறவிடப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்து வருவதாகவும், ஏழைப் பெற்றோரிடமிருந்து அன்பளிப்பு என்ற பெயரில் கட்டாய நிதி வசூலிப்பு பாடசாலைகளில் நடைபெறுவதாக முறைப்பாடுகள் தமக்குக் கிடைத்திருப்பதாகவும் மாகாணக் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இவ்வளவும் சொன்ன சுற்றுநிருபம் - வழக்கமான, சம்பிரதாயமான வார்த்தைப் பிரயோகங்களையும் குறிப்பிட்டு - இந்த 'சட்டவிரோதச் செயலை' - சட்டமுறைக்குட்பட்ட செயலாக எவ்வாறு மாற்றிக் கொள்ளலாம் என்ற வழிமுறையையும், அதிபர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதுதான் வேடிக்கையாகிப்போகிறது.

மாணவர்களைப் புதிதாக அனுமதிக்கும்போது உதவி நிதியோ, அன்பளிப்புக்களோ மற்றும் பொருட்களோ- எவர் மீதும் வற்புறுத்திப் பெற்றதாகவோ, தொந்தரவு கொடுத்துப் பெற்றதாகவோ இருக்கக்கூடாது என 'அழுத்திக்கூறும்' இச்சுற்றுநிருபம் -

இதுவரை காலமும் பெற்ற அனுபவங்களை மீட்டுக்கொள்ளாது - அன்பளிப்புக் கோரும் அதிபர்களுக்கு நோகாது அடிகொடுக்குமாப் போல, அடி கொடுக்கும் வித்தையையும் செய்கிறது.

அதாவது - இதுவரை குறிப்பிட்ட பாடசாலை தன்னிடமிருந்து வற்புறுத்தியோ, வலிந்தோ, அடாத்தாகவோ, அன்பளிப்புப் பெற்றதாக - எந்தப் பெற்றோருமே, பகிரங்கமான எதிர்ப்புக்களைக் காட்ட முன்வராதபட்சத்தில் -

இனியும் அவ்வாறு பெற்றோர்கள் துணிந்து தட்டிக் கேட்க முன்வருவார்களா என்ற சந்தேகம் பலமுடனேயே இருக்கும் வேளையில் -

இச்சுற்றுநிருபம் எதனைச் சாதிக்கப்போகிறது என்பது முக்கியமான வினாவாகும்.

இன்று வடக்கு -கிழக்கிலுள்ள பாடசாலைகளில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கூட - தேசியப் பாடசாலைகளிலும், பிரபல பாடசாலைகளிலும் அனுமதி கோரும்போது -

அவர்களிடமிருந்தும் அன்பளிப்புப் பணம் பெறப்படுவது சாதாரணமாகிவிட்ட சூழ்நிலையில் - அவ்வாறானதொரு கட்டத்தில் புலமைப்பரிசில் பரீட்சையின் நோக்கமே பகிரங்கமாகக் கேள்விக்குள்ளாக்கப்படும்போது,

- அதனையே தடுக்க முடியாதிருக்கும் கல்வித் திணைக்களம், ஒட்டுமொத்த ரீதியில் - வெறும் சுற்றுநிருபம் மூலம் - அன்பளிப்புப் பெறும் பழக்கத்தை இல்லாதொழித்துவிடலாம் என எண்ணுவது வேடிக்கையானது மட்டுமல்ல -

இதன்மூலம் - 'ஒப்புக்குச் சப்பாணியாக' - நாமும் அறிவித்திருக்கிறோம் பாருங்கள் - என்ற விதத்தில் செயற்படுவதையே எடுத்துக் காட்டுகின்றது.

எனவே, இந்தச் சிக்கலை, ஏழைப் பெற்றோர்கள் எதிர்நோக்கும் பிரச்சினையை - யதார்த்தபூர்வமாகத் தீர்ப்பதற்கு என்ன வழியிருக்கிறது என்பது கண்டறியப்பட வேண்டும்.

'இலவசக் கல்வி' என ஒருபுறம் உரத்துக் கூறிக் கொண்டு - மறுபுறம், பாடசாலைக் கட்டடத்திற்கு எனவும், தளபாடங்களுக்கு எனவும், மைதானம் அமைக்க உதவி எனவும் இன்னும் பல தேவைகளைக் கூறிக்கொண்டு - அன்பளிப்புப் பெறுவதென்பது - இலவசக்கல்வியின் அர்த்தத்தையே சீரழித்துவிடும் என்பதைக் கவனத்திற்கொண்டு - சுற்றுநிருபங்கள் வழயான சம்பிரதாயபூர்வ அறிவித்தல்களை விடுத்து - யதார்த்தபூர்வமாக, உண்மையாக - அன்பளிப்புக் கலாசாரத்தை தடுப்பதற்கு கல்வித் திணைக்களம் வழி காணட்டும்.

# நாட்டின் பிரதான அரசியல் வழிமுறைக்குள் புலிகளைக் கொண்டுவருவதே எமது நோக்கம்

## அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்

(கொழும்பு)

ஜே.வி.பியைப்போல விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் நாட்டின் பிரதான அரசியல் வழிமுறைகளில் பங்குபற்றச் செய்வதே ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் நோக்கம் என்று ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்துள்ளார்.

படுகொலைகள், கொள்ளை நடவடிக்கைகள், களவு போன்ற தீவிரச்செயல்களில் ஜே.வி.பியினர் ஈடுபட்டிருந்தபோதிலும், அந்தக் கட்சியை நாட்டின் பிரதான அரசியல் வழிமுறைக்குள் கொண்டுவந்ததே ஐக்கிய தேசியக் கட்சிதான்.

விடுதலைப் புலிகளையும் இவ்வாறான அரசியல் வழி முறைக்குள் சேர்ப்பது கஷ்டமான விடயமல்ல என அவர் மேலும் கூறினார்.

இங்கிரியவில் புதிய தபாலகத்தைத் திறந்து வைத்த பின்னர் நடந்த கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பட்டார்.

நாட்டின் தற்போதைய சமாதான நடவடிக்கைகளுக்கு ஜே.வி.பி எதிர்ப்புத் தெரிவித்துவருவது கவலைக்குரிய விடயமாகும். சமாதானத்திற்கு எதிராக ஜே.வி.பி. செயற்படுவதை நாட்டு மக்கள் கண்டனம் செய்யவேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

# சமுர்த்தி வங்கி நாளை சங்கரத்தையில் திறப்பு

(யாழ்ப்பாணம்)

வலி.மேற்குப் பகுதிக்குரிய சமுர்த்தி வங்கி நாளை திறந்துவைக்கப்படவுள்ளது.

வட்டுக்கோட்டை சங்கரத்தைச் சந்திக்கு அண்மையில் உள்ள கட்டடம் ஒன்றில் இவ்வங்கி செயற்படவுள்ளது.

யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் சிவபாதம் வைபவரீதியாக இவ்வங்கியைத் திறந்துவைக்கவுள்ளார். நாளைமுதல் இவ்வங்கி முழுமையாகச் செயற்படும்.

# கலாமின் உரையை மொழிபெயர்த்த துணை ஜனாதிபதி மயங்கி வீழ்ந்தார்

## இந்திய நாடாளுமன்றத்தில் சம்பவம்

இந்திய நாடாளுமன்றத்தின் கூட்டத்தொடரை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் ஜனாதிபதி அப்துல்கலாமின் உரையை மொழிபெயர்த்துக் கொண்டிருந்த துணைஜனாதிபதி பைரோன்சிங் ஷெகாவத் மயங்கிவீழ்ந்தார்.

இவ்வருடத்திற்கான இந்திய நாடாளுமன்றக் கூட்டத்தொடர் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. கூட்டத்தொடரை ஜனாதிபதி அப்துல்கலாம் தொடக்கிவைத்து - ஆங்கிலத்தில் உரையாற்றினார்.

அந்த உரையைத் துணைஜனாதிபதி பைரோன்சிங் ஷெகாவத் ஹிந்தியில் மொழிபெயர்த்துக் கொண்டிருந்தபோதே திடீரெனச் சபையில் மயங்கிவீழ்ந்தார். பின்னர் வைத்தியப் பரிசோதனைகளுக்கு அவர் உட்படுத்தப்பட்டார்.

இந்தக் கூட்டத்தொடரில் உரையாற்றிய இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம் -

இலங்கையின் இறையாண்மையைக் காப்பாற்றக்கூடியதும் - அங்கு வாழும் அனைத்து இனமக்களினதும் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய அரசியற்தீர்வு ஏற்படுவதையே இந்தியா விரும்புவதாகக் குறிப்பிட்டார். (01)

# பொலிஸ் திணைக்களத்தில் அதிகளவு ஊழல், ஒழுங்கீனங்கள்

## உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க

பொலிஸ் திணைக்களத்தில் அதிகளவு ஊழல் மற்றும் ஒழுங்கீனங்கள் காணப்படுவதாக அமைச்சர் ஜோன் அமரதுங்க கூறியுள்ளார்.

சில சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் நேரடியாக ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக இவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் போதைவஸ்த்துக் கடத்தியவர்களுடன் உறவுகள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

பொலிஸ் உயர்பயிற்சி நிறுவனத்தில் நேற்றுமுன்தினம் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிநெறியொன்றை ஆரம்பித்து வைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# போராட்டத்தை மீறி எரிபொருளை விநியோகித்தால் தீயிட்டு எரிப்போம்

## சீனன்குடா ஊழியர்கள் மிரட்டல்

தமது போராட்டத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் எந்தவொரு எரிபொருள் பௌசரும் சீனன்குடா எரிபொருள் சேமிப்பு நிலையத்துக்கு வருமேயானால் அதைத் தீயிட்டு எரிப்போம் -

என வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். சீனன்குடாவில் பணியாற்றும் 300 ஊழியர்கள் கடந்த நான்கு நாட்களாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்திய நிறுவனம் சீனன்குடா எரிபொருள் குதங்களைக் கையேற்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இப்போராட்டம் நடத்தப்பட்டு வருகின்றது. இதனால் திருகோணமலை உள்ளிட்ட பகுதிகளுக்கான எரிபொருள் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சீனன்குடா எரிபொருள் நிலையத்தைப் பொறுப்பேற்கவுள்ள இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் ஊழியர்களின் நலனில் தாம் விசேடகவனம் செலுத்துவதாக உறுதியளித்துள்ளது.

## பனை அபிவிருத்திச் சபையில்

# 10 வருடம் கடமையாற்றிய ஊழியர் சுயவிருப்பின் பேரில் ஓய்வுபெறலாம்!

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்திச்சபையில் 10 வருடங்களுக்கு மேல் கடமையாற்றியவர்கள், சுயவிருப்பத்தின் பேரில் ஓய்வுபெறலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஓய்வு பெறுபவர்களுக்கு அவர்களது பணித்தகமைக்கு ஏற்றவாறு நஷ்டஈட்டுக் கொடுப்பனவு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி அதிகாரிகள் தரத்தைச் சேர்ந்தவர்களுக்குத் தலா 5 லட்சம் ரூபாவும், நடுத்தர உத்தியோகத்தர்களுக்கு நாலரை லட்சம் ரூபாவும், சாதாரண பணியாளர்களுக்கு 4 லட்சம் ரூபாவும் நஷ்டஈடாக வழங்கப்படும்.

சபையில் ஆட்குறைப்புச் செய்வதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகப் பனை அபிவிருத்திச் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# ரயில்களின் வேகத்தை குறைக்க அரசு உத்தரவு!

ரயில்களின் வேகத்தைக் குறைக்குமாறு அரசாங்கம் உத்தரவிட்டிருக்கின்றது. தற்போது மணித்தியாலத்திற்கு 50 மைல் சராசரி வேகத்தைக்கொண்ட ரயில்களை மணிக்கு 30 மைல் வேகமாகக் குறைக்குமாறு அரசாங்கம் உத்தரவிட்டிருக்கின்றது.

ரயிற்பாதைகளைப் பழுதுபார்ப்பதற்கு அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்யாத காரணத்தாலேயே ரயில்களின் வேகத்தைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. ரயிற்பாதைகளின் தரம் குறைந்திருப்பதால் விபத்துக்களைக் குறைப்பதற்கே இந்நடவடிக்கை என ரயில்வேப் பொறியியற்துறை அறிவித்துள்ளது.

அத்துடன் - தமக்குப் போதிய வசதிகள் இல்லை என்றும், இதனால் ரயிற்பாதைகளின் தரத்தைப் பேணுவதில் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாகவும் பொறியியற்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இதனால் நீண்ட காலத்திற்குத் தம்மால் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கப்படமுடியாது என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ரயில்களின் வேகத்தை அரசாங்கம் குறைக்குமாறு உத்தரவிட்டமை, ரயில் சேவையைத் தனியாரிடம் வழங்குவது தொடர்பான அழுத்தத்தை மக்கள் மீது ஏற்படுத்தவே என்று பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினர் சரத் அமுனுகம தெரிவித்திருக்கிறார்.

# தமிழரின் பாரம்பரிய கலை வடிவத்தை மன்னார் - மாதோட்டத்தில் கண்டேன்

**நாட்டுக்கூத்துக் கலையில் நடிகனாக, அண்ணாவியாக, எழுத்தாளனாக இருந்து பல நாட்டுக் கூத்துக்களை உருவாக்கியுள்ள பாஷையூர் தேவதாசன் கடந்த வருடம் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுனர் விருது பெற்றவர். இவருடனான நேர்காணல் இது.**

*கேள்வி*: நாட்டுக்கூத்துக் கலையினுள் நீங்கள் பிரவேசிப்பதற்குக் காரணமாக இருந்த பின்புலங்கள் பற்றிக் கூறுங்கள்.

*பதில்*:- நான் ஒரு நாட்டுக்கூத்து அண்ணாவியார் பரம்பரையைச் சேர்ந்தவன். எனது தந்தை வழி, தாய்வழியினர் நாட்டுக்கூத்துக் கலைஞர்கள். இவர்களைத் தொடர்ந்து நானும் இந்தக் கலையில் இறங்கினேன். சூசையாம்பிள்ளை நாட்டுக் கூத்தில், அந்தோனியார் நாட்டுக் கூத்தில் குறிப்பிடப்படும் பாஷையூர் சுவாம்பிள்ளை எனது தாய் வழியைச் சேர்ந்தவர். ஈழத்திலே நாட்டுக் கூத்து அண்ணாவிமார்களில் சிறந்து விளங்கிய ஞானப்பு, வஸ்தியாம் பிள்ளை ஆகிய இருவரும் தகப்பன் வழியினர்.

இவ்விரு வழியினரின் உறவுகளின் அர்ப்பணிப்பும், நாட்டுக் கூத்துக் கலையினை வளர்க்க வேண்டும் என்ற முயற்சியுந்தான், நான் இந்த நிலைக்குவர முக்கிய காரணமாக அமைந்தது. அத்துடன், 1953 ஆம் ஆண்டு பரியோவான் கல்லூரியில் படிக்கின்றபோது "புனிதவதி" என்ற நாட்டுக்கூத்து - சிறுவராக இருந்த எங்களைக் கொண்டு நடத்த எடுத்த முயற்சி - நான் இக்கலையில் பிரவேசிக்கத் தூண்டியது.

நாட்டுக்கூத்துக் கலையைப் பழக எனது தாயார் எனது கல்வியைக் காரணமாக வைத்து, விரும்பாத போதும் - தந்தையார் எங்களுடைய நாட்டுக்கூத்துப் பரம்பரையைத் தொடரவேண்டும் என்பதற்காக என்னை இந்தக் கலையில் ஈடுபட அனுமதித்தார்.

புனிதவதி என்ற எனது முதலாவது நாட்டுக்கூத்தில் முக்கிய பாத்திரமாக விளங்கிய புனிதவதியார் என்ற பாத்திரத்தினை நடித்த எனக்கு, நாட்டுக்கூத்துக் கலையில் ஆர்வத்தினை ஏற்படுத்தியிருந்தது.

மன்னார் மாவட்டத்தில் அரச திணைக்களத்தில் எழுதுவினைஞனாக இருந்த நான், பல்வேறு




துறைசார் அதிகாரிகளுடனும் பழக ஏற்பட்ட வாய்ப்பு எனக்குத் துணையாக இருந்தது. நானாட்டான் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடமையாற்றியபோது, எனக்கு விருப்பமான விளையாட்டு, கலாசாரம் ஆகிய இரண்டு துறைகளிலும் உள்ளவர்களையும், கிராம மக்களையும் சந்திக்கும் வாய்ப்புகள் எனக்கு ஏற்பட்டன.

தமிழருடைய பாரம்பரியக் கலை என்று நான் கண்டது நானாட்டானில் மாதோட்டம் என்ற கிராமத்தில்தான். அங்கு பெஞ்சமின் செல்வம், கபிரியேற்பிள்ளை, வைசாப பிள்ளை போன்றோரும் என்னை நாட்டுக்கூத்துக் கலையில் ஈடுபட வேண்டும் என்ற விருப்பை ஏற்படுத்தியதன் விளைவே - இன்று ஒரு கலைஞன், ஒரு அண்ணாவி என்ற நிலைக்குக் கொண்டுவந்துள்ளது.

*கேள்வி*: நீங்கள் ஆக்கிய நாட்டுக் கூத்துக்கள் தொடர்பாக எடுத்துச் சொல்லுங்கள்?

*பதில்*: நாட்டுக்கூத்துக்களை எழுதவேண்டும் என்ற ஆர்வத்தை ஏற்படுத்தியவர் சு.வித்தியானந்தன். நானாட்டானில் இருந்தபோது வங்காலை என்ற இடத்தில் வளர்பிறை மன்றத்தினர் இராவணேசன் என்ற ஆட்டக்கூத்தினை அரங்கேற்றிய போது அதைப் பார்க்க எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது.

இந்த ஆட்டக் கூத்தினை யாழ்ப்பாண நாட்டுக்கூத்து மரபில் ஏன் மாற்றி மேடையேற்றக்கூடாது என்ற சிந்தனை எனக்கு ஏற்பட்டது. இதன் பயனாக மேற்படி நாட்டுக்கூத்தை 1965 ஆம் ஆண்டு "இலங்கையர் கோன்" என்ற பெயரில் பாஷையூர் சி.அந்தோனி, பிலிப்பையா ஆகிய இரு அண்ணாவியார்களின் உதவியுடன் பாஷையூரில் முதன்முதல் அரங்கேற்றினேன்.

இந்த நாட்டுக்கூத்து எனக்குப் பெரும் வெற்றியைத் தந்தது. இந்த நாட்டுக்கூத்தை தொடர்ந்து நளனுடைய சரித்திரத்தை வைத்து "கலியுகம் வென்ற காவலன்" என்ற இரண்டாவது படைப்பை வெளியிட்டேன். அதனைத் தொடர்ந்து "சிலேற்றி சீலன்" என்ற மூன்றாவது கூத்தினைப் பேராசிரியர் சண்முகதாஸின் வேண்டுதலுக்கு அமைய உருவாக்கி, மேடை ஏற்றியுள்ளேன்.

*கேள்வி*: உங்களுக்குக் கலாபூஷணம் என்ற விருதைப்பெற உதவிய - நீங்கள் எழுதிய கூத்து நூல் பற்றி?

*பதில்*: எங்களுடைய பாரம்பரியக் கூத்தினை இந்நாட்டிலுள்ள மக்கள் அறிந்திருக்க வேண்டும் என்பதற்காக நான் மன்னார் மாவட்டத்தில் அழிந்து காணப்படும் "அல்லிராணிக் கோட்டை" என்ற நாட்டுக் கூத்தினைப் படைத்தேன். இது நூலுருப் பெற்றது. இந்த நூல் எனக்குக் கலாபூஷணம் விருதைப் பெற வழிசமைதததது.

*கேள்வி*: இன்றைய சமூகத்தில் நாட்டுக்கூத்து மிகவும் அருகி வருகின்றது. மக்கள் மத்தியில் இந்தக் கலை அந்நியப்படுவது குறித்து உங்கள் கருத்து?

*பதில்*: தமிழருடைய பாரம்பரிய நாட்டுக்கூத்து அன்றைய காலங்களைப் போலன்றி மக்களிடத்தில் செல்வாக்குக் குறைந்துள்ளது. நவீன தொடர்பாடல் வசதிகள் ஏற்பட்டுள்ள இந்தச் சமூகத்தில், இது பின் தள்ளப்பட்டுள்ளது. கூத்தினை ஆடுகின்றவர்கள், பாடுகின்றவர்கள் ஜனரஞ்சகமாக எழுதுவதும் இல்லை, நடிப்பதும் இல்லை. இன்றைய சமூகத்தினர் கவர்ச்சியான படைப்புக்களையே விரும்புகின்றனர். இவ்வாறு இவர்களின் விருப்புகளுக்கு ஏற்ப, படைப்புக்களைச் சிருஷ்டித்தால் தான் மக்கள் மத்தியில் நாட்டுக்கூத்துக் கலையை முழுமையாகக் கொண்டு செல்லமுடியும்.

*கேள்வி*: யாழ்ப்பாணத்தில் நாட்டுக் கூத்துக் கலையை எவ்வாறு புத்துயிரூட்டலாம் என்று நீங்கள்



பாஷையூர் தேவதாசன்

கருதுகின்றீர்கள்?

*பதில*: பல்கலைக்கழக மட்டத்திற்கு இந்தக்கலை கொண்டு செல்லப்பட வேண்டும். அங்கு இந்தத்துறை சார்ந்த பேராசான்கள் தலைமையில் நாட்டுக்கூத்து எழுத்தாளர்கள், அண்ணாவிமார், நடிகர்கள் கூடி - நாட்டுக்கூத்துக் கலை பற்றித் தெளிவான ஒரு நிலை கொண்டுவரப்பட்டு, வழிநடத்தப்பட வேண்டும். இதன்மூலம் நாட்டுக் கூத்துக் கலையைப் பாதுகாக்க முடியும் எனக் கருதுகின்றேன்.

**நேர்காணல் - சந்திரமோகன்**

---

## யாழ் . உள்ளூராட்சி அதிகாரிகளுக்கு மூன்று நாள் முகாமைத்துவப் பயிற்சி

யாழ்.மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் செயலாளர் மற்றும் உள்ளூராட்சி உதவியாளர்களுக்கு விரைவில் நவீன முகாமைத்துவம் சம்பந்தமான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கையை அகில இலங்கை உள்ளூராட்சி நிர்வாக சேவை தொழிற்சங்க ஒருங்கிணைப்புச்சபை மேற் கொண்டுள்ளது.

இம்மாதம் 28 ஆம் திகதி முதல் இப்பயிற்சி 3 நாட்களுக்குத் தொடர்ச்சியாக இடம்பெறவுள்ளது.

இப்பயிற்சிநெறிக்கான விண்ணப்பங்களை ஏற்கும் திகதி கடந்த 12 ஆம் திகதியுடன் முடிவடைந்துவிட்டது. எனினும், இப்பயிற்சி நெறிகள் வருங்காலத்தில் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவிருப்பதால் விண்ணப்பிக்கத் தவறியவர்கள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக விண்ணப்பிக்கலாம் எனவும் பயிற்சி இணைப்பாளர் தெரிவித்தார்.

மேற்படி பயிற்சி நெறியினை நடாத்துவதற்குக் கொழும்பிலிருந்து முதற்கட்டமாக 10 பேர் கொண்ட அரசாங்க நிர்வாக சேவையைச் சேர்ந்த அதிகாரிகள் குழு இங்கு வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(100)

## யாழ். மாவட்ட மாணவர்களின் நிலை கல்வி அபிவிருத்தி மாநாட்டில் ஆய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டக் கல்வி அபிவிருத்தி தொடர்பான மாநாடு நேற்று முன்தினம் யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் பேராசிரியர் சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்றது.

தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த மாநாட்டில் கல்விப்பணிப்பாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள், தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

யாழ்.மாவட்டத்தில் மாணவர்களுடைய கல்வியை எவ்வாறு மேம்படுத்துவது என்பது தொடர்பாகவும், அதில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் - தொடர்பாகவும் இச்சந்திப்பில் ஆராயப்பட்டது.

### வரணியில் சமுர்த்தி வங்கி திறப்பு

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் முதலாவது சமுர்த்தி வங்கி கடந்த 15 ஆம் திகதி வரணியில் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. வங்கியின் பெயர்ப் பலகையை யாழ்.மாவட்ட சமுர்த்தி ஆணையாளர் திறந்து வைத்தார்.

வங்கியின் கட்டடத்தினை தென்மராட்சிப் பிரதேச அரசியல் பிரிவைச் சேர்ந்த சிறிநாத் நாடாவினை வெட்டி திறந்து வைத்தார்.

### மாவடியில் கால்நடை வைத்தியப் பணிமனை

(அராலி)

சித்தங்கேணிச் சந்திக்கு அருகாமையில் இயங்கிவந்த வட்டுக்கோட்டைக் கால்நடை வைத்தியப் பணிமனை கடந்த புதன்கிழமை தொடக்கம் - மாவடி அடைக்கலம் தோட்டம் கந்தசாமி கோவிலுக்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள புதிய கட்டடத்திற்கு இடம்மாற்றப்பட்டுள்ளது.

மாகாண சபையின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் 20 லட்சம் ரூபா செலவில் கட்டிமுடிக்கப்பட்ட பணிமனையைக் கடந்த புதன்கிழமையன்று கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் பொன்.இராமநாதன் திறந்து வைத்தார்.

(118)

### மெய்வன்மைப்போட்டி

கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வியாழக்கிழமை பி.ப 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் சு.சிவபாதரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தெல்லிப்பளைக் கோட்ட முன்னாள் கல்விப் பணிப்பாளர் ஆ.வ.கணேசலிங்கமும், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி.சிவமகாராசாவும் தெல்லிப்பளைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கா.சந்திரபாலனும் கௌரவ விருந்தினராக யாழ்.கல்விக கழகப் பொறுப்பாளர் நா.இலக்கியனும் கலந்துகொள்வர்.

### விபத்தில் காயம்

துன்னாலை தெற்கைச் சேர்ந்த வி.கணபதிப்பிள்ளை (வயது 65) என்பவர் முகமாலைக்கு சைக்கிளில் செல்லும்போது வழியில் லொறியினால் மோதுண்டு இடது கால் முறிந்தநிலையில் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

## தையற்பயிற்சி நிலையம் மருதங்கேணியில் திறப்பு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள தையல் பயிற்சி நிலையத்தை - உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை கடந்த 12 ஆம் திகதி திறந்துவைத்தார்.

இப்பயிற்சி வகுப்பில் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவாகியுள்ள 30 பெண்கள் கலந்துகொள்ளவிருக்கின்றனர். இவர்களுக்கு ஒருவருடகாலத்திற்கு இப்பயிற்சி வழங்கப்படவுள்ளது. இப்பயிற்சிக்கான சகல வசதிகளையும் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை செய்து கொடுத்துள்ளது.

(17)

## குழந்தை பிறந்த சில நாட்களில் தாயார் சுகயீனத்தால் மரணம்

(யாழ்ப்பாணம்)

குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்து சில நாட்களேயான தாயார் ஒருவர் பரிதாபகரமாக மரணமடைந்த சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

கடந்த 8 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்த அராலி செட்டியாங்குளத்தைச் சேர்ந்த நாகேந்திரன் கோமதி (வயது 25) எனும் பெண், 13 ஆம் திகதி வீடு சென்றுள்ளார். சுகயீனம் காரணமாகக் கடந்த 15 ஆம் திகதி மீண்டும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காது நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் உயிரிழந்தார்.

(ரா)

## சமாதானத்துக்காக எந்த விலையையும் கொடுக்கலாம் என்பதே அரசின் கொள்கை

**என்கிறார் மகிந்த ராஜபக்ஷ**


(கொழும்பு)

அமைதிக்காக எந்த விலையையும் கொடுக்கலாம் என்ற கொள்கையுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க செயற்பட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கடுவெலவில் நடந்த ஜனகோஷப பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். இந்தப் பேரணியில் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர்.

இப்பேரணியில் உரையாற்றிய மகிந்த ராஜபக்ஷ - அரசாங்கம் தேர்தல்கால வாக்குறுதிகளை யாவது நிறைவேற்றி, மக்களின் அபிலாஷைகளைத் தீர்த்துவைக்க முன்வரவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

(க)



# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




## எப்படி, எதுவரை....!


### இங்கிலாந்து



*அணித்தலைவர்:-* நஸார் ஹு"சைன்.
*பயிற்றுநர்:-* டங்கன் பிளெட்சர்
*குழு A:-* அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், இந்தியா, சிம்பாப்வே, நமீபியா, நெதர்லாந்து
*பலம்:-* மிகவும் உபயோகமான துடுப்பாட்ட வரிசை - ட்ரெஸ் கொதிக், நிக்நைட், மைக்கல் வகன் போன்றோர் வேகமாக ஓட்டங்கள் சேகரிப்பவர்கள். நஸார், அலெக்ஸ் ஸ்ருவட் நிலைத்து நின்று ஆடுபவர்கள். அதிரடியாக ஆடுவதற்கு பிளிண்டோவ், பிளக்வெல்.
*பலவீனம்:-* பந்துவீச்சுத் தாக்கம் சந்தேகத்துக்கிடமானது. அன்ட்ரூ கெடிக், மத்தியூ ஹொகார்ட் தவிர அந்தளவுக்கு ஆள் இல்லை. ஹேர்மிசன், அன்டர்சன் இருவரும் மொத்தம் 14 **ODI** மட்டும் ஆடியவர்கள்.
*முக்கிய நபர்:-* நஸார் ஹு"சைன்.
தனது சகல திறமைகளையும் ஒருமுகப்படுத்த வேண்டும். அதி உயர் திறமைசாலி என்று கூறிவிடமுடியாது. அணியை ஒருங்கிணைத்தவர்.
*ஒருநாள் தரம்:* 1999 இன் பின் எந்தச் சுற்றுப் போட்டியும் வெல்லவில்லை. இந்தியா, பாகிஸ்தான், அவுஸ்திரேலியா ஆகியவற்றுக்கு எதிராகச் சிறப்பாகச் செய்யவில்லை. **VB SERIES** தோல்வி. அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 13 **ODI** தோல்வி.
*கடந்தகாலச் சாதனை:* 1975 அரைஇறுதி, 1979 (மேற்கிந்தியத்தீவுகள்), 1987 (அவுஸ்திரேலியா), 1992 (பாகிஸ்தான்), இறுதியாட்டத்தில் சந்தித்தவர்கள். 96, 99 1st **ROUND** இல் **OUT**.
*எதிர்வு கூறல்:* முதல்சுற்றில் மூன்றாம் இடம்.

## நம்பிக்கையுடன் ரசிகர்கள்!

இந்தியாவைப் பொறுத்தவரையிலாயினும், சிம்பாப்வேயைப் பொறுத்தவரையிலாயினும் இவர்கள் சந்திக்கப் போகும் இன்றைய தினம் மிக முக்கியமானதாகும்.



ஏனெனில், இங்கிலாந்தின் உபயத்தில் கிடைத்த நான்கு புள்ளிகளுடன், சிம்பாப்வே எட்டுப் புள்ளிகள் பெற்று அவுஸ்திரேலியாவுடன் சமனாக நிற்கிறது. இந்தியா இரண்டு ஆட்டங்களில் 4 புள்ளிகள் மட்டும் பெற்று, இங்கிலாந்து, பாகிஸ்தான் அணிகளையும் சந்திக்க வேண்டிய நிலையில் உள்ளது. ***Super Six*** இற்குள் செல்லப்போகும் அணிகளில் ஒன்றாக இவர்கள் இருவருக்கும் சந்தர்ப்பம் இருக்குமா என்பதற்கு முன்னால், இருவரின் சந்திப்பு எப்படி அமையப்போகிறது என்பதும், அவசியமானதாகவே இருக்கப்போகிறது. சிம்பாப்வே தன்னை ஓர் இலகுவான அணியாக என்றும் காட்டிக்கொண்டதில்லை. மேலும் ஆட்டம் நடைபெறப்போவதும் சிம்பாப்வே அணியின் தாயக மண்ணில். மேலும் ஹீத் ஸ்ரீக், அன்ட்ரூ பிளவர், ஒலங்கா, கிரெய்க் விஷாட், கிராண்ட் பிளவர் போன்ற திறமையான வீரர்களைக் கொண்ட அணி. இவர்களின் மன உறுதிக்குத் துணையாக இருக்கப்போவது, இவர்கள் 99 இல் சுப்பர் சிக்ஸு"க்குள் வந்தவர்கள் என்பது.

இதேவேளை - இந்தியா, எந்தளவிற்கு எதிர்பார்க்கப்பட்டதோ அந்தளவைக் கொஞ்சமேனும் எட்டவில்லை என்பது இரண்டு ஆட்டங்களிலும் நிரூபிக்கப்பட்டது. திறமையான, இளமை நிறைந்த துடுப்பாட்ட வரிசை, எழுந்தமானமாகப் பலமில்லாதது என்று ஒதுக்கிவிட முடியாத பந்து வீச்சாளர்கள் இருந்தும் இந்தியாவிற்கு நடந்தது என்ன? இவர்கள் எந்தளவில் சிம்பாப்வேயை எதிர்கொள்ளப் போகிறார்கள். பொதுவாக இந்த ஆட்டத்தில் இந்தியா தன் முழுச் சக்தியையும் வெளிக்காட்ட முயற்சிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. யாரையும் குற்றம் சொல்லாவிட்டாலும், **V.V.S.** லக்ஸ்மன் இல்லாதது ஒரு குறை என்ற அபிப்பிராயம் உண்டு.

அதேபோன்று டிராவிட் தனித்து துடுப்பாட்டக் கடமையை மட்டும் செய்யவேண்டும் என்பதும், பார்த்திவ் பட்டேல் ***Keeper*** பதவியை ஏற்கவேண்டும் என்றொரு கருத்தும் உண்டு.



குட்டிப் பையனுக்குத் துடுப்பாட்டச் சுமை இல்லாமல் இருக்குமாயின் அணிகுள் கொண்டு வரலாம் தற்போதைய நிலையில் மத்திய வரிசையில் யாராயினும் ஒருவரை இந்த ஆட்டத்தில் தவிர்த்துப்பார்க்கலாம். இந்திய அணிக்கு இது ஒரு சமர்க்களம்தான். இரண்டு அணிகளுமே தத்தம் திறமையைக் காட்டத்தான் போகின்றன.

இந்த ஆட்டத்தில் மத்தியஸ்தம் வகிக்கப்போகிறவர்கள் அசோகா டீ சில்வா மற்றும் கோர்ட் சென். இந்திய அணிக்கு அசோகா டீ சில்வாவின் மத்தியஸ்தத்தில் அவ்வளவு விருப்பம் இருப்பதில்லை. அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான ஆட்டத்திலும் இவரே மத்தியஸ்தம் வகித்தவர். எது எவ்வாறாயினும் நல்லதொரு ஆட்டத்தைப் பார்க்க ரசிகர்கள் மீண்டும் தயாராகிவிட்டார்கள். இவர்களை ஏமாற்ற இரண்டு அணிகளுக்கும் உரிமை கிடையாது. மத்தியஸ்தர்களையும், சிலவேளை அபத்தமான **TV** வர்ணனைகளையும், திரும்பத் திரும்ப ஒரே மாதிரியான வெறுப்பேற்றுகின்ற விளம்பரங்களையும் ரசிகர்கள் பொறுத்துக் கொள்கின்றார்கள் என்றால், அது உங்களுக்காகத்தான் அணி வீரர்களே. குறிப்பாக இந்தியா ***Get back to business.***

**ஜோசவ் கிருஷ்ணா**

## வெற்றி நாயகன் பிளெமிங்

கடந்த **16.02.2003** அன்று **Johannesburg** மைதானத்தில் மிகவும் பரபரப்பாக நடைபெற்று முடிந்திருக்கின்றது நியூசிலாந்து எதிர்



பொல்லக்குடன் கிப்ஸ். தலைமை சரியில்லை.

தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான போட்டி. ஏற்கனவே எதிர்பார்த்ததுபோல இரு அணிகளும் இந்தப் போட்டியை ஒரு சவாலாகவே நினைத்து ஆடியிருக்கின்றன என்பது போட்டியின் போக்கில் தெரிந்தது. முதலில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்றுத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, 50 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 306 ஓட்டங்கள் பெற்றது. அந்த அணியின் கிப்ஸ் பெற்ற அற்புதமான



அஸ்ரல் - துவம்சம்.

143 ஓட்டங்கள் அணிக்கு நல்ல பலமாக இருந்தது. அணித்தலைவர் பொல்லக் வெற்றி நிச்சயம் என்ற கோதாவில் களத்தடுப்புக்கு இறங்கியபோது, நியூசிலாந்து அணித்தலைவர் பிளெமிங் ஆரம்பத்திலேயே தொடங்கிய இடி முழக்கத்துடன் கூடிய துடுப்பாட்டம் தென்னாபிரிக்க அணியை ஒரு கணம் திக்குமுக்காட வைத்தது.

ஆனாலும், சொந்த மண்ணிலே தென்னாபிரிக்கா தோற்பதைத் தாங்க முடியாத இயற்கை, மழை மூலம்



பிளெமிங் - திருவிழா.

போட்டியைச் சற்றே குழப்பியது. அப்போது நியூசிலாந்து பெற்ற ஓட்டங்கள் 182 இற்கு 1 விக்கெட், (ஓவர்கள் 30.3)

மழை நின்றவுடன் டக்வேர்த் லூயிஸ் முறை மூலம் 36.5 ஓவர்கள் ஆடி 229 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கு என்ற ரீதியில் வெற்றியை நியூசிலாந்து தனதாக்கிக் கொண்டது.


இந்த டக்வேர்த் லூயிஸ் என்பது **Run, Over, Wicket** ஆகிய மூன்றையும் எடுத்துக் கணிக்கப்பட்டு கொடுக்கப்படுகின்ற ஓர் இலக்கு. இந்த இலக்கு அன்று தென்னாபிரிக்காவுக்கே சாதகமாக இருந்தது. இருந்தாலும் அவர்களுடைய பொறுப்பற்ற ஆட்டம் தோல்விக்கு வித்திட்டது. ஒரு விடயத்தை ஆராய்ந்து பார்க்க வேண்டும். அது என்னவென்றால், தென்னாபிரிக்க அணி **Super Six** இற்குள் நுழையுமா? இலங்கையை வென்றாலும் அது 50% தான் சாத்தியமாகும். சொந்தமண் பயன்படவில்லை. **S.A. best of luck.**

**பஞ்சநாதன் சுதர்சன்**

## நேற்றைய ஆட்டத்திலிருந்து...!



கைலை ஓட்டமெதுவும் பெறாமலேயே வீழ்த்திய மகிழ்ச்சியில் பங்களாதேஷ் வீரர்கள்.



ஹைண்ட்ஸ் - பெரிதாகச் சோபிக்காத ஆரம்பத் துடுப்பாட்டம்.



பவலின் அரைச் சதத்தை நோக்கிய அதிரடித் துடுப்பாட்டம்.

## நாளும் ஒரு வினா

**ஏழுமுறை நடைபெற்று முடிந்த உலகக்கிண்ணப் போட்டிகளில் மூன்றுமுறை இறுதி ஆட்டத்துக்கு வந்தும் இது வரையில் வெற்றிக்கிண்ணம் பெறாத அணி எது?**

**இங்கிலாந்து 1979 - 87 - 92**

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

### மேற்கிந்தியத் தீவுகள் எதிர் பங்களாதேஷ் அணி

#### மேற்கிந்தியத் தீவுகள் அணி

| | | |
|---|---|---|
| வேவல் | C ஷகாரியர் b மக்பூத் | 18 |
| கைல் | C சன்வார் b இஸ்லாம் | 00 |
| லாறா | C ஷகாரியர் b ஹிஷானுல் | 46 |
| சந்தர்போல் | LBW ஹிஷானுல் | 29 |
| ஹூப்பர் | C&b கப்பாலி | 45 |
| சர்வான் | C&b மக்பூத் | 13 |
| பவல் | C சன்வார் b இஸ்லாம் | 50 |
| ஜேக்கப்ஸ் | not out | 06 |
| டிரேக்ஸ் | Run out | 00 |
| டிலோன் | C அஷ்ரபுல் b இஸ்லாம் | 10 |
| கொலிமோர் | not out | 00 |
| உதிரிகள் 27 | | |

மொத்தம் 9/244 (50 ஓவர்கள்)

#### பந்து வீச்சு - பங்களாதேஷ் அணி

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| இஸ்லாம் | 10 | 0 | 62 | 3 |
| தல்ஹா | 8 | 0 | 46 | 0 |
| மக்பூத் | 10 | 1 | 48 | 2 |
| ஹிஷானுல் | 10 | 0 | 34 | 2 |
| றபீக் | 10 | 0 | 44 | 0 |
| கப்பாலி | 2 | 1 | 3 | 1 |

#### பங்களாதேஷ் அணி

| | | |
|---|---|---|
| ஷகாரியர் | C கைல் b டிரேக்ஸ் | 05 |
| ஹிஷானுல் | b டிலோன் | 12 |
| அஷ்ரபுல் | not out | 08 |
| சன்வார் | not out | 02 |
| உதிரிகள் 5 | | |

மொத்தம் 2/32 (8.1 ஓவர்கள்)

#### பந்து வீச்சு - மேற்கிந்தியத் தீவுகள் அணி

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| டிலோன் | 4.1 | 0 | 13 | 1 |
| டிரேக்ஸ் | 4 | 1 | 17 | 1 |

மழையின் காரணமாக ஆட்டம் கைவிடப்பட்டது.

இரண்டு அணிகளுக்கும் தலா இரண்டு புள்ளிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. சுப்பர் ஸிக்சிற்குத் தகுதிபெற மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு அடுத்துவரும் போட்டிகளில் வெல்லவேண்டிய அவசியமுள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# எண்ணெய்க்குதங்கள் இந்தியாவிற்கு; திருமலையில் ஊழியர் ஆர்ப்பாட்டம்!

திருகோணமலையில் உள்ள எண்ணெய்க் குதங்களை, இந்திய நிறுவனம் ஒன்றிற்கு குத்தகைக்கு கொடுக்கும் விடயத்தை எதிர்த்து, நேற்று திருகோணமலையில் பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

தொடர்ச்சியாக மூன்று நாட்கள் வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட்டுவரும் ஊழியர்கள், நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டத்தையும் மறியல் போராட்டத்தையும் நடத்தினர். இதனால் திருகோணமலையில் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்தது. திருகோணமலை அரசாங்க செயலகம் மற்றும் பிரதேச செயலகம் உட்பட, அரசாங்கத் திணைக்களங்கள் முன்பாக மறியல் போராட்டம் இடம் பெற்றமையால், போக்குவரத்துக்களும் ஸ்தம்பிதமடைந்தன.

எண்ணெய்க் குதங்களை இந்திய நிறுவனம் ஒன்றிற்கு குத்தகைக்குக் விடும் திட்டத்தை அரசாங்கம் உடனடியாகக் கைவிட வேண்டும் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷம் எழுப்பினர். அவ்வாறு இந்திய நிறுவனத்திற்குக் கொடுப்பதானால், எமது பிரதேச வளங்கள் இந்தியாவிற்கு சென்று விடும் என்றும், வேலை வாய்ப்புக்கள் எமது பிரதேச இளைஞர்களுக்குக் கிடைக்காது என்றும் சுலோக அட்டைகளில் வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன.

இந்த ஆர்ப்பாட்டத்தின்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

### இன்றைய ஆட்டங்கள்

சிம்பாப்வே Vs இந்தியா - Harare Sports Club, Harare - 2 pm.
இலங்கை Vs கனடா - Boland Park, Paarl - 2 pm.
இங்கிலாந்து Vs நமிபியா - St.George's Park, Port Elizabeth - 2 pm.

# புலிகளின் விமானம் குறித்து புலனாய்வு செய்ய வேண்டுமாம்

## எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை

விடுதலைப் புலிகளால் கொண்டு வரப்பட்டுள்ளதாகக் கூறப்படும் சிறியரக விமானம் பற்றிய புலனாய்வினை உடனடியாக அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளால் கொண்டு வரப்பட்டுள்ளதாகக் கூறப்படும் இந்தச் சிறியரக விமானம் பற்றிய முறைப்பாட்டை ஏற்கனவே பாதுகாப்புப் பிரிவுகள் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆயினும், இந்த விடயத்தில் அரசாங்கம் கவனம் எடுக்கவில்லை என நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்திலே அவர் மேலும் தெரிவித்தார்.

# வெளிநாட்டு உதவிகளை தடுக்க எதிர்க்கட்சிகளின் கூட்டுச் சதி!

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

ஜனதா விமுக்தி பெரமுனவும், பொதுஜன ஐக்கிய முன்னணியும், சந்தர்ப்பவாதக் குழுக்களும் சேர்ந்து இலங்கைக்கு கிடைக்கும் வெளிநாட்டு உதவிகளை நிறுத்த முயல்கின்றன. - இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியிருக்கின்றது.

ஜனாதிபதியுடன் வெளிநாட்டு உதவிகளை தடுத்து நிறுத்துவது சம்பந்தமான உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்துவதில், ஜே.வி.பி வெற்றி கண்டிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் சென ரத் கப்புக்கொட்டுவ அறிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் ஜே.வி.பியும், பொதுஜன ஐக்கிய முன்னணியும் கூட்டணி உருவாக்கும் நோக்கில் ஜனாதிபதி இல்லத்தில் நடந்த கலந்துரையாடலின்போது இந்த உடன்படிக்கை ஏற்பட்டுள்ளதாக அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட தரப்புக்கள் உதவிகள் வழங்க வேண்டாம் என்று வலியுறுத்துவதற்காக தூதரகங்கள், வெளிநாட்டு அமைப்புக்கள் போன்றவற்றிற்கு விஜயம் செய்ய இருப்பதாகவும், இது தேசத்துரோக நடவடிக்கை எனவும் கப்புக்கொட்டுவ விபரித்தார்.

வெளிநாட்டு உதவிகள் மூலம் மக்களின் பொருளாதாரம் வலுவடையும். மக்களின் வருவாயும் அதிகரிக்கும். இது போன்ற நற்பயன்களைத் தடுப்பதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணியில் இருக்கும் தீய சக்திகளும், ஜே.வி.பியும் முனைவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் மேலும் சாடியுள்ளார்.

### கறுப்புப்பட்டி போராட்டம்...

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது - நெடுந்தீவுக்கடலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மீன்பிடிப் படகை வழிமறித்து மூன்று போராளிகளை வீரச்சாவடையச் செய்த கடற்படையினரின் அடாவடித்தனத்தையும், மானிப்பாயில் பெண் போராளிகள் மீதும் பொதுமக்கள் மீதும் தாக்குதல் நடாத்திய இராணுவத்தினரின் அத்துமீறலையும், திருமலையில் அரசியல் கடமையில் ஈடுபட்டிருந்த பெண் போராளிகளைக் கைது செய்த பொலிஸாரின் அநாகரிகமான செயலையும் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முழுமையாக மதிப்பளித்து, தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதான முயற்சியில் ஈடுபட்டிருக்கும் வேளையில், சிறிலங்கா ஆயுதப் படையினர் தமிழீழ விடுதலைப் புலிகளின் பொறுமையைப் பரிசோதனைக்குட்படுத்தி புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறுவது வரவேற்கத்தக்கதல்ல.

சமாதான முயற்சியை குழப்பி மீண்டும் யுத்தத்தில் ஈடுபட்டு சுய இலாபம் தேடும் இனவாத அரசியல் கும்பலின் செயற்பாடுகளை அரசாங்கமும, சமாதானத்தை விரும்பும் சிங்கள மக்களும் தடுத்து நிறுத்த முன்வர வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### புலனாய்வு...

செயற்பட்டு வருகின்றன. சில வீதித் தடைகள், சோதனை நிலையங்கள் அகற்றப்பட்டாலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டே இருக்கிறது.

எமது புலனாய்வுச் சேவைகள் - பாதுகாப்பை மையமாக வைத்தே செயற்பட்டு வருகின்றன. வெளிநாட்டு உதவிகளைப் பெற்று அவற்றைப் பலப்படுத்தியே வருகிறோம் எனக் கூறினார்.

## சீனி விநியோக கேள்விகோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு 2200 மெற்றிக் தொன் வெள்ளைச் சீனி விநியோகம் செய்வதற்கு- புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் மீள்குடியமர்த்துகை அமைச்சு மூலம் கேள்விகள் கோரப்படுகின்றன. இக் கேள்விகளுக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள், யாழ். மாவட்ட செயலகப் புனர்வாழ்வுப் பிரிவில் இதற்கான படிவங்களையும் ஏனைய தகவல்களையும் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### நம்பிக்கையில்லாப்...

கடும் பாதுகாப்புடன் சபைக்கு வந்தார். அவரை பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கரகோஷம் எழுப்பி வரவேற்றனர்.

கொழும்பு மேல்நீதிமன்றத்தில் நேற்றுக்காலை முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த ஆஜர் செய்யப்பட்டபோது, நாடாளுமன்றத்துக்குச் செல்வதற்கான அனுமதியை நீதிபதிகள் வழங்கினர்.

நேற்றைய நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய பொதுஜன ஐக்கிய முன்னணி எம்.பி. நிமால் சிறிபால டி சில்வா, வடக்கு - கிழக்கில் சட்டம் ஒழுங்கைப்பேண பாதுகாப்பு அமைச்சர் மாரப்பன தவறிவிட்டார் என்றும், விடுதலைப் புலிகளுக்கு அவர் சுதந்திரம் அளித்துள்ளார் எனவும் குற்றஞ்சாட்டினார்.

பிரேரணையை வழிமொழிந்து உரையாற்றிய ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, கடந்த வருடம் கைச்சாத்தான யுத்த நிறுத்த ஒப்பந்தத்தினால் புலிகள் அதிக சலுகைகளை இப்போது அனுபவிக்கின்றனர். புலிகளைத் தம் கட்டுக்குள் கொண்டுவர அரசு எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றார்.

தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி. மாவை சேனாதிராசா தனதுரையில், பாதுகாப்பு அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை சமாதான முயற்சியை தடம்புரள வைக்கவும், நாட்டை அழிவுக்கு இட்டுச்செல்லவும் திட்டமிட்டுக் கொண்டுவரப்பட்ட ஒன்று எனச் சுட்டிக்காட்டினார்.

# புலிகளுடன் இணைந்த 4 பேர் பெற்றோரிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சுயவிருப்பின் பேரில் இணைந்த இரு இளைஞர்கள் உட்பட நான்கு பேர் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நேற்று மாலை 4.00 மணிக்கு யாழ். மாவட்ட அரசியற்துறை அலுவலகத்தில் மக்கள் தொடர்பாளர் பவனீதன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சுயவிருப்பத்தின் பேரில் இணைந்து, விலக விரும்பிய இரு இளைஞர்களும், பதினெட்டு வயதுக்கு உட்பட்ட இருவருமே பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் - இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புப் பிரிவின் பிரதிநிதி ஆன் சென்டர், ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் யாழ்ப்பாணத்திற்கான தலைமை அதிகாரி செலின் லொகோபிரட், யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதி நேபல் அபிஸ், மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரி சந்திரசேகரா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(ச)

# சங்கரி வெளிநாடு செல்வதால் சந்திப்புக்குச் செல்லவில்லை

## கூட்டணி அலுவலகத்தில் இருந்து விளக்கம்

கிளிநொச்சி அரசியற்துறை அலுவலகதில் இருந்து தொடர்புகொண்டு 22 ஆம் திகதி சந்திக்க வருமாறு இருவாரங்களுக்கு முன்னர் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரிக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

ஆனால், அத்திகதியில் தான் ஒஸ்ரியாவில் கருத்தரங்கில் கலந்து கொள்ளவிருப்பதாகவும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்து கொண்டு சந்திப்புக்கு ஒழுங்கு செய்யுமாறும் ஆனந்தசங்கரி குறிப்பிட்டிருந்தார் என்றும்,

ஆனந்தசங்கரி புலிகளின் அழைப்பை நிராகரிக்கவில்லை என்றும், யாழ்.நூலகத் திறப்பு விழா சம்பவத்துக்கும் இதற்கும் தொடர்பில்லை என்றும் - தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைமை அலுவலகத்திலிருந்து இணைச் செயலாளர் இரா.சங்கையா வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கந்தரோடை பௌத்த மயமாக்கல்; எதிர்த்து இன்று கண்டனப் பேரணி

(யாழ்ப்பாணம்)

கந்தரோடைப் பகுதியில் இராணுவத்தினரால் புதிதாக அமைக்கப்பட்ட புத்தர் சிலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று கண்டனப் பேரணியொன்று நடைபெறவுள்ளது.

வலிகாமம் வடக்கு, தெற்கு பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்தக் கண்டனப் பேரணி இன்று காலை 9.30 மணிக்கு ஸ்கந்தவரோதயாக் கல்லூரி முன்றிலிலிருந்து ஆரம்பமாகும்.

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பணிமனையைப் பேரணி சென்றடைந்ததும், அங்கு பிரதேச செயலரிடம் மகஜர் கையளிப்பதுடன் கண்டனப் பொதுக் கூட்டமும் நடைபெறும்.

(ச)

### உலக, ஆசிய...

வங்கியின் பிரதிநிதி ஜோன் கூனி, ஐ.நா. அபிவிருத்தித் திட்ட வதிவிடப் பிரதிநிதி மைக்கல் பேர்மியோ மற்றும் ஜப்பானிய மாநாட்டுக்கான தேவைகள் மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் ரோர் ரோஸ் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

புலிகள் தரப்பில் அரசியற்துறைப் பொறுப்பாளருடன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோரும், சிறான் பணிப்பாளர் செல்வினும் கலந்துகொண்டனர்.

### ரோக்கியோவில்..

நிறுவனங்களும் இணைந்து செயற்பட்டு வருகின்றன.

சுகாதாரம், கட்டுமானம், போக்குவரத்து, கல்வி போன்ற வெவ்வேறு துறைகளைக் கவனிப்பதற்காக, இவர்கள் ஒன்பது குழுக்களாகப் பிரிந்து செயற்பட்டு வருகின்றனர். இக்குழுக்களுக்கு ரோர் ரோஸ் என்பவர் தலைவராகச் செயற்படவுள்ளார்.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.59 | 97.02 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 154.27 | 155.60 |
| 1 யூரோ | 103.36 | 104.53 |
| 1 சுவிஸ் பிராங் | 70.21 | 71.41 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 56.67 | 57.68 |
| 1 ஜப்பானிய யென் | 00.80 | 00.81 |
| 1 சவூதி றியால் | 25.83 | 25.83 |



# இந்திய பரம்பரை ஜோதிடர்

## அருள்வாக்கு

## அம்பிகா அம்மா



கைரேகை, ஜாதகம் மற்றும் திருமணத்தடை, கல்வியில் பிரச்சினை, தீராத வியாதி, தொழில் முன்னேற்றம் தொடர்பிலான சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படும்.

26.02.2003 வரை மட்டும் தங்கியிருப்பார்கள். எல்லா நாளும் சாத்திரம் கூறப்படும்.

சந்திக்கும் இடம்: மடோனா லொட்ஜ்
121, கஸ்தூரியார் வீதி,
(ஸ்ரீ முருகன் ஜுவல்லர்ஸ்/லிங்கன் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம்.
(252)

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 19.02.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.